விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 18 புதன்கிழமை (01.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

## வீடு புகுந்து வாள்வெட்டுத் தாக்குதல் ஒருவர் பலி; 7 பேர் படுகாயம்

### கொடிகாமம் பாலாவி தெற்கில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பாலாவி தெற்கு பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மேலும் 7 பேர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

20 பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் ஒன்று பாலாவி தெற்கில் உள்ள வீடொன்றினுள் உள்நுழைந்து அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டியதில் ஒருவர் மரணமடைந்துள்ளார். 23

பயங்கரவாதத் தாக்குதல் குறித்த

## விசாரணை அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும்

### ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)
பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவின் அறிக்கை அனைவருக்கும் பகிரங்கப்படுத்தப்படும் என ஜனா 23

வடக்கில் இன்று முதல்

## பகுதி பகுதியாக மின்தடை அமுல்

(யாழ்ப்பாணம்)
இன்று முதல் எதிர்வரும் 30ம் திகதி வரையான ஒரு மாத காலத்திற்கு, வடக்கின் பல பகுதிகளில் கட்டம் கட்டமாக மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்பட 24

## குளவி கொட்டியதில் குடும்பஸ்தர் பலி

மிருசுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
குளவிக் கொட்டுக்கு இலக்காகி 4 பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 23

## காத்தான்குடியில் சுற்றிவளைப்பு

### பெண்கள் உட்பட 12 பேர் கைது

(கொழும்பு)
மட்டக்களப்பு, காத்தான்குடியில் முன்னெடுக்கப்பட்டிருந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் 24

## ரம்ழான் பண்டிகைக்கு முன்பாக

# பாரியளவிலான தாக்குதல்கள் மீண்டும் இடம்பெறும் சாத்தியம்



### இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா டப்லிஸ் எச்சரிக்கை

(கொழும்பு) தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பினர் இலங்கையில் தொடர்ந்து செயற்படுவதாக தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா டப்லிஸ், ரம்ழான் பண்டிகைக்கு முன்பாக பாரியளவிலான தாக்குதல்கள் மீண்டும் இடம்பெறும் சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

மக்களுக்காகவே போராடினோம்

## இராணுவத்தினருக்கு பதில் வழங்கிய முன்னாள் போராளிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண நகரில் வாழும், புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும், இராணுவத்தின் 512ஆவது பிரிகேட் 23

## கிளிநொச்சியில் விபத்து முதியவர் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சேவியர் கடைச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் மேலும் 23

2கோடி பெறுமதியான

## அபின் போதைப்பொருள் வடமராட்சியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ் குடாநாட்டில் முதன்முறையாக அதிகளவு அபின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான ஒன்றரைக் கிலோ அபின் போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டது.

வடமராட்சி தொண்டைமானாறு - கெருடாவில் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான இருவர் நேற்று நடமாடியுள்ளனர். 23

## அசாதாரண சூழ்நிலையையடுத்து மீண்டும் குடும்பப் பதிவு

(கொழும்பு)
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்து மீண்டும் குடும்பப் பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளின் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 23

## பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு இலங்கைக்கு ஐ.நா பூரண ஒத்துழைப்பு



### ஜனாதிபதியிடம் ஐ.நா பிரதி பொதுச் செயலாளர்

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்திற்கு எதிராக துரித நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு தலைமைத்துவத்தை வழங்கி வருவதன் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலகத்தினருக்கு சிறந்த முன்னு 23

## தௌஹீத் ஜமாத் அமைப்புக்கு கோத்தா காணி வழங்கினார்!

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)
பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தௌஹீத் ஜமாத் அமைப்பின் அலுவலகத்தை நிறுவ காணியொன்றினை பெற்றுக்கொடுத்தார் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி 2019ம் வருடத்துக்கான உலர் உணவு வழங்கல்கள்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2019ம் ஆண்டிற்கான உலர் உணவு வழங்குவதற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளுமாறு தலைவர் பிராந்திய பெறுகைகள் குழு அழைப்பு விடுக்கின்றது.


| வைத்தியசாலைகளின் விபரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப்படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை பூநகரி | NP/K/RDHS/DF/Akk/ 2019/01 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 2500/- |
| ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/K/RDHS/DF/Mul/ 2019/02 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 2500/- |

1) கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையில் செய்யப்படும்.
2) விண்ணப்பிக்கத்தகுதியானோர், கறுப்புப்பட்டியலில் குறிப்பிடப்படாதவராகவும் கீழ் குறிப்பிடப்படும் தேவைகளை நிவர்த்தி செய்யவும் வேண்டும்.
   அ. 2019 ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட வணிகப் பத்திரம்
   ஆ. உலர் உணவு வழங்கலுக்கான பதிவு செய்யப்பட்ட வணிகப் பத்திரம்
   இ. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளை வடமாகாணத்தில் இருத்தல்.
3) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதிபெற கேள்வி கோருபவர்கள் கேள்விப்பத்திரங்களின் பகுதி 2 இல் கேட்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4) ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம், அதே நேரத்தில் கேள்வி கோரல் ஆவணங்களை 09.00 மணி முதல் 15.00 மணி வரை வேலை நாட்களில் பார்வையிடலாம்.
5) ஆங்கில மொழியில் உள்ள முழுமையான அச்சிடப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரியில் 02.05.2019 முதல் 15.05.2019 திகதி வரை அதற்கான மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தினை செலுத்தி வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
6) கேள்விப்பத்திரங்கள் 16.05.2019ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப் பெட்டியில் இடவோ முடியும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் "உலர் உணவு வழங்கல்கள் என்றும் மற்றும் விண்ணப்பிக்கும் வைத்தியசாலை" போன்ற விபரங்களும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வி சமர்ப்பிப்பதற்கான கால எல்லை முடிவடைந்தவுடன் கேள்வி கோருபவர்கள் அல்லது அவர்களது அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளும் பிரசன்னமானவர்களின் முன்னிலையில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.
7) 2019.05.08 ஆம் திகதி முப 10.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி எனும் முகவரியில் கேள்வி கோரலுக்கு முன்னான ஆயத்த கூட்டம் இடம்பெறும்.
8) சகல கேள்வி விண்ணப்பப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மேற்கூறிய தொகைக்கு மீளளிக்கத்தக்க வைப்புப் பணப்பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்.
9) கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். கேள்விச் சபையின் தலைவர் கேள்விப்பத்திர நடைமுறைகளை எந்நேரத்திலும் முழுமையாகவோ பகுதியாகவோ இழப்பீடு ஏதும் வழங்காது ரத்துச் செய்வதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளார்.

**தலைவர், பெறுகைகள் குழு,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(C-6244)

# மரண அறிவித்தல்



## திருமதி நவமணி சுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை - விக்ரோறியாக் கல்லூரி)**

திருமதி நவமணி சுப்பிரமணியம் அவர்கள் 26.04.2019 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அ.சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர் - யா/காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் சுதன், சுரேஸ், மோகனா, பரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி சிவச்செல்வி, திருமதி வாசுகி, ஜெயப்பிரகாஸ், திருமதி கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10.00 மணிக்கு இல.20, இராஜவரோதயம் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(8616)

சு.சுரேஸ் (மகன்)
077 557 6592

தகவல்:-
குடும்பத்தினர்

# திருகோணமலையில் தேடுதல் ஒன்பது பேர் நேற்றுக் கைது

(திருகோணமலை)

திருகோணமலை ஜமாலியா மீனவ கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரசபைக்குட்பட்ட ஜமாலியா முஸ்லிம் மீனவ கிராமத்தை சுற்றி நேற்று பெருந்திரளான பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு சோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது ஜமாலியா முஹைறூதீன் பள்ளிவாசல் மற்றும் தொழுகை அறை களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த சுற்றிவளைப்பில் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

## விடுமுறை

(கரணவாய்)

மே தினத்தினை முன்னிட்டு இன்று புதன் கிழமை நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களிற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி வர்த்தக சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ம-60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பெண் வேலை ஆட்கள் தேவை.
**வயதெல்லை: 18 தொடக்கம் 30 வரை**
**வேலைநேரம்: காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை**
(8630)
தொடர்பு
**076 118 4010**

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித நயாலகள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-6234)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் ஆங்கில ஆசிரியரான சி.கிரிதரன் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்
**ரஞ்சனி சிவராஜா**
அவர்கள்


29.04.2019 திங்கட்கிழமையன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்**
**றோயல் அக்கடமி, யாழ்.நகர்- நல்லூர்**

(8636)

# 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வல்லிபுரம் கந்தசாமி**

**(தலைவர், கரவெட்டி வெல்லன் கிராய் பிள்ளையார் கோவில் பரிபாலன சபை)**

**தோற்றம்:10.03.1932**
**மறைவு: 01.04.2019**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**இமையாணன் அறிவாலயம் சனசமூக நிலையம், இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் இமையாணன், உடுப்பிட்டி.**

(C-6246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்ஸின் மத்திய நிலையம் ஆமர் வீதியில் கண்டுபிடிப்பு!

## 12 தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் மத்திய நிலையமாகப் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் வீடொன்று கிராண்ட்பாஸ் ஆமர் வீதியிலுள்ள தொடர் மாடி குடியிருப்பு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




மேல் மாகாண உளவுத்துறையினர் குறித்த வீட்டை கடுமையான சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் இதன்போது தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரானால் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் கருத்துக்கள் அடங்கிய இறுவெட்டுக்கள், கணனி, 12 கையடக்கத் தொலைபேசிகள், 5 கடவுச் சீட்டுக் கள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் மேல் மாகாண உளவுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் குறித்த மத்திய நிலையத்தை அமைப்பதற்கு வீட்டை வழங்கிய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதால் அவரைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த விவகாரம் தொடர்பாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முணசிங்க, கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க ஆகியோரின் மேற்பார்வையில் கொட்டாஞ்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆகியோரின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

## கிழக்கு ஆளுநர்

# ஹிஸ்புல்லாவின் அலுவலகத்திலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு! இருவர் கைது





(காத்தான்குடி)

மட்டக்களப்பு- காத்தான்குடி, ரெலிகொம் வீதியிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாவின் காரியாலயத்திலிருந்து 48 ரக T-86 துப்பாக்கி ரவைகளுடன் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் அக் காரியாலயத்தில் பணிபுரிந்து வந்த அல்.அஜி.எம்.ஐ.நஸார் மற்றும் என்.எம்.எ.கரீம் ஆகிய இருவரையே பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

இதேவேளை காத்தான்குடி கடற்கரைப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு தேடுதலில் பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுபட்டிருந்தபோது, கடவுச்சீட்டின்றி நின்ற 5 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மட்டக்களப்பின் பல பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மூன்று தேவாலயங்களும் மீள்நிர்மாணம் செய்யப்படும்

(கொழும்பு)

பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளான மூன்று தேவாலயங்களையும் மே மாதம் 30 ஆம் திகதிக்குள் மீள் நிர்மாணம் செய்யவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் உயரிய சலுகைகளை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் எனவும் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான தேவாலயங்களை மீள் நிர்மாணம் செய்யும் வகையில் முப்படைப் பிரதானிகளுடன் பாராளுமன்றத்தில் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புனித உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாத தாக்குதலுக்குள்ளான கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு கட்டுவபிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் ஆகியவற்றை முழுமையாக புனர் நிர்மாணம் செய்து விரைவில் கிறிஸ்தவ மக்களுக்கு கொடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# படுகொலைகளை காரணம் காட்டி தேர்தல்களை ஒத்திவைப்பது தவறு

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகளை காரணம் காட்டி தேர்தல்களை ஒத்திவைப்பதானது ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதற்குச் சமம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் குண்டு வெடிப்புக்கள் மற்றும் படுகொலைகளுக்கு மத்தியில் தேர்தல்கள் நடத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய கடந்த பல மாதங்களாக ஒத்திவைக்கப்பட்டு வருகின்ற தேர்தல்களை உடன் நடத்தியாக வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றின் ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எச்சரிக்கையாக இருங்கள்

## பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்து

(சாவகச்சேரி)

பொதுமக்களைப் பாதுகாப்பாகவும் அதேவேளையில் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

சாவகச்சேரி பகுதியில் சந்தேகத்திற்கிடமான நபர்கள் மற்றும் பொதிகள் காணப்பட்டால் உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் ஒலிபெருக்கி மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

மேலும் திருட்டு உள்ளிட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருப்பதுடன் தமது உடைமைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் முடிந்தவரையில் தனிமையில் இருப்பதைத் தவிர்க்குமாறும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். (இ-30)

# சமூக வலைத்தளங்கள் மீதான தடை நீக்கம்

சமூகவலைத்தளங்கள் மீதான தடையை நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைத் தொடர்பு ஆணைக்குழுவுக்குப் பணிப்புரை விடுத்ததையடுத்து, சமூகவலைத்தளங்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதலை தொடர்ந்து சமூக வலைத்தளங்களினூடாக பரவிய பொய்யான வதந்திகள் மற்றும் சமூக வலைத்தளங்களை மையப்படுத்தி தீவிரவாதத்தை திணிக்கும் நடவடிக்கைகள் போன்ற காரணத்திற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமூகவலைத்தள நடவடிக்கைகளை தற்காலிமாக நிறுத்தி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையிலேயே நேற்று ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய தடைநீக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ரசிகரை தாக்கிய நெய்மர்

ரசிகர் ஒருவரை நெய்மர் தாக்கியது சர்ச்சையை கிளப்பி உள்ளது.

பிரான்ஸில் பிரெஞ்ச் கிண்ண கால் பந்து தொடர் நடந்தது. இதன் இறுதிப் போட்டி பாரிஸ் செயின்ட் ஜெர் மைன் (பி.எஸ்.ஜி., றென்னஸ் அணிகள் மோதின.

ஆட்ட நேர முடிவில், போட்டி 2-2 என சமநிலையில் முடிந்தது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் பி.எஸ்.ஜி அணி தோல்வியடைந்தது.

இதன்பின், பிரேசிலை சேர்ந்த நெய்மர் உள்ளிட்ட பி.எஸ்.ஜி., வீரர்கள் இரண்டாவது இடத்திற்கான பதக்கத்தை பெற சென்று கொண்டிருந்தனர். அப்போது, 'கலரியில்' இருந்த ரசிகர் ஒருவர் ஒவ்வொரு வீரரையும் அலைபேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். நெய்மர் வந்தபோதும், இதையே ரசிகர் தொடர்ந்தார். திடீரென, அந்த ரசிகரிடம் நெய்மர் ஏதோ பேசினார். பின், அவரது முகத்தில் லேசாக 'பஞ்ச்' கொடுத்தார் நெய்மர், நடையைக் கட்டினார். இவரின் செயலுக்கு, சக வீரர்களிடம் ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

**தவறுதான்**

நெய்மரின் செயலுக்கு சமூகவலைத் தளத்தில் கடும் எதிர்ப்பு எழுந்தன. இதற்கிடையே, ரசிகருடன் மோதலில் ஈடுபட்டதை தவறு என இன்ஸ்டாகிராமில் ஒப்புக் கொண்டார்.




# சென்னைக்கு கிடைக்குமா முதலிடம்

## இன்று டில்லி அணியுடன் பலப்பரீட்சை

ஐ.பி.எல்., லீக் போட்டியில் இன்று சென்னை - டில்லி அணிகள் மோதுகின்றன. இதில், சென்னை வென்றால், மீண்டும் புள்ளிப்பட்டியலில் 'நம்பர் 1' இடத்தை பெறலாம்.

இந்தியாவில் ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரின் 12வது சீசன் நடக்கிறது. இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கவுள்ள லீக் போட்டியில் டில்லி, சென்னை அணிகள் மோதுகின்றன.

ஐ.பி.எல்., தொடர் வரலாற்றில் அனைத்து சீசனிலும் (2016, 17 தொடரில் இல்லை) சென்னை அணி 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறி உள்ளது. இம்முறையும் இது கைகூடி உள்ளது. டில்லிக்கு நிகராக புள்ளி பெற்ற போதும் (16) 'ரன்ரேட்' அடிப்படையில் சென்னை இரண்டாவது இடத்தில் உள்ளது. மும்பைக்கு எதிரான கடந்த போட்டியின் தோல்வி தான் இதற்கு காரணமாக அமைந் தது.

**வருவாரா தோனி?**

கடந்த போட்டியில் ஆரம்ப வீரர் முரளி விஜய் மட்டுமே ஜொலித்தார். வோட்சன் ஏமாற்றினார். காய்ச்சல் காரணமாக கடந்த முறை அணித் தலைவர் தோனி பங்கேற்கவில்லை. இவர் இல்லாதது அணியில் நன்றாகவே தெரிந்தது.

தலைமையைப் பொறுப்பேற்ற ரெய்னா தடுமாறினார். ராயுடு, ஜாதவ் என 'நடுத்தர வரிசை' துடுப்பாட்டம் ஆட்டம் கண்டது. காய்ச்சல் குணமாகாததால், தோனி இடம் பெறுவது சந்தேகமாக உள்ளது. 'வேகத்தில்' தீபக் சகார், டுவைன் பிராவோ அசத்த வேண்டும். சுழற்பந்துவீச்சாளர் சான்ட்னர் கைகொடுத்தாலும், ஹர்பஜன், தாகிர் ஜொலிக்க மறுக்கின்றனர். இவர்களின் 'சுழல்' ஆயுதத்தை தீட்டினால் சொந்த மண் ணில் நடக்கவுள்ள கடைசி போட்டியை வெற்றியுடன் முடிக்கலாம். 'சகலதுறை வீரர்' ஜடேஜாவும் அணிக்கு திரும்பி இருப்பது பலம் சேர்க்கிறது.

**இளம் அணி**

ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான இளம் டில்லி அணி பட்டையை கிளப்புகிறது. கடந்த ஐந்து போட்டியில் நான்கில் வென்றுள்ளது. பிரித்வி ஷா, ஷிகர் தவான் என மண்ணின் மைந்தர்கள் அசத்துகின்றனர். இளம் விக்கெட் காப்பாளர் ரிஷாப், சென்னை மண்ணில் எதிர்பார்ப்புக்கு இடையே களமிறங்குகிறார்.

இஷாந்த், ரபாடா 'ஆபத்தான' பந்துவீச்சாளர்களாக உள்ளனர். நடப்பு சீசனில் அதிக விக்கெட் (25) வீழ்த்தி உள்ள, ரபாடாவின் 'வேகத்தை' சமாளிப்பது கடினம்தான். சேப்பாக்கம் மைதானம் 'சுழலுக்கு' சாதகமானது என்பது சற்று ஆறுதலான விடயம்.

### இந்தியன் பிறிமியர் லீக் - 2019 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | டில்லி கப்பிட்டல்ஸ் | 12 | 8 | 4 | 16 |
| Q2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 8 | 4 | 16 |
| 3 | மும்பை இந்தியன்ஸ் | 12 | 7 | 5 | 14 |
| 4 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 12 | 6 | 6 | 12 |
| 5 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 5 | 7 | 10 |
| 6 | கிங்ஸ் XI பஞ்சாப் | 12 | 5 | 7 | 10 |
| 7 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 5 | 7 | 10 |
| 8 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 12 | 4 | 8 | 8 |

*பெங்களூர் - ராஜஸ்தான் போட்டிக்கு முன்னைய நிலைவரம்

# போதையால் வந்தது பொல்லாப்பு

## இங்கிலாந்து அணியிலிருந்து ஹேல்ஸ் நீக்கம்



போதைமருந்து பயன்படுத்திய விவகாரத்தில் சிக்கிய அலெக்ஸ் ஹேல்ஸ், உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் (வயது-30), இதுவரை 11 டெஸ்ட் (573 ஓட்.,), 70 ஒருநாள் (2419 ஓட்.,), 60 சர்வதேச 'ரி20' (1644 ஓட்.,) போட்டிகளில் விளையாடி உள்ளார். கடந்த 2017ல் சகவீரர் பென் ஸ்ரோக்ஸுடன் இணைந்து பிரிஸ்ரலில் உள்ள இரவு விடுதி ஒன்றில் வாலிபர் ஒருவரை தாக்கிய விவகாரத்தால், தடை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டார்.

தடைக் காலம் முடிந்ததையடுத்து சர்வதேச போட்டிக்கு மீண்டும் திரும்பிய ஹேல்ஸ், உலகக் கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில் இடம் பிடித்தார்.


இந்நிலையில் இவர், சமீபத்தில் தடை செய்யப்பட்ட உற்சாக போதை மருந்து பயன்படுத்தியது தெரிய வந்துள்ளது. இதனையடுத்து இவரை அயர்லாந்துக்கு எதிரான ஒரே ஒரு ஒருநாள் போட்டி (மே 3), பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர் (மே 8-19) மற்றும் உலகக் கிண்ண (மே 30 - ஜூலை 14) தொடரில் இருந்து அதிரடியாக நீக்கி, இங்கிலாந்து கிரிக்கெட் சபை (இ.சி.பி.,) உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட் அணி நிர்வாக இயக்குநர் ஆஷ்லே கில் ஸ் கூறுகையில், "இங்கிலாந்து கிரிக்கெட்டின் எதிர்கால நலன் கருதி, உலக கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட அணியில் இருந்து அலெக்ஸ் ஹேல்ஸ் நீக்கப்பட்டுள்ளார்.

தற்போது அணியில் நல்லவிதமான சூழல் இருப்பதால், தேவையில்லாத கவனச் சிதறலுக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஹேல்ஸின் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாக அர்த்தமில்லை. அவருக்கு தேவையான் ஆதரவு மற்றும் ஆலோசனைகளை இ.சி.பி., வழங்கும்," என்றார்.




# 'துணிச்சல்' வீரர் ரிச்சர்ட்ஸ்



உலக கிண்ண வரலாற்றில் விவியன் ரிச்சர்ட்சின் அதிரடி ஆட்டத்தை மறக்க முடியாது. 'ஹெல்மெட்' அணியாமல், வாயில் 'சுயிங்கம்' மென்று கொண்டு இவர் ஆடும் 'ஸ்டைல்' வித்தியாசமானது.

கடந்த 1952ல் அன்டிகுவாவில் பிறந்த ரிச்சர்ட்ஸ், 1974ல் மே.தீவுகள் அணியில் அறிமுகமானார்.

உலக கிண்ணத் தொடரில் நான்கு முறை (1975, 79, 83, 87) பங்கேற்றார். இதில், 1975ல் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் "களத்தடுப்பில்" அசத்தினார். டர்னர், இயான் சப்பல், கிரேய்க் சப்பல் ஆகியோரை 'ரன்-அவுட்' செய்தார். இதன் மூலம் மே.தீவுகள் அணி முதல் முறையாக உலக கிண்ணம் வெல்ல கைகொடுத்தார்.

**அதிரடி 181 ஓட்.,**

அடுத்து 1979ல் நடந்த உலக கிண்ணத் தொடரிலும் கலக்கினார் ரிச்சர்ட்ஸ். இங்கிலாந்துக்கு எதிரான இறுதிப் போட்டியில் சதம் (138 ஓட்டங்கள்) அடித்து, அணிக்கு மீண்டும் சம்பியன் பட்டம் பெற்றுக் கொடுத்தார். பின் 1987ல் நடந்த இலங்கைக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் 125 பந்துகளில் 181 ஓட்டங்கள்(16 பவுண்டரி, 7 சிக்சர்) விளாசி, அணிக்கு இமாலய வெற்றி தேடிக் கொடுத்தார். மொத்தம் 23 உலக கிண்ணப் போட்டிகளில் 3 சதம் உட்பட 1013 ஓட்., (சராசரி 63.31), 10 விக்கெட் டுக்களை வீழ்த்தினார். 187 ஒரு நாள் போட்டிகளில் 11 சதம் உட்பட 6,721 ஓட்., 100 'பிடி', 118 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சுமார் 17 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடிய ரிச்சர்ட்ஸ், கடைசி வரை 'ஹெல்மெட்' அணியாமல் வெறும் தொப்பியுடன் விளையாடினார். ஜெப் தோம்சன், டெனிஸ் லில்லி போன்ற அந்தக் கால வேகப்புயல்களின் 'பவுன்சர்களை' துணிச்சலாக சமாளித்த இவரது மன உறுதி பாராட்டத்தக்கது. கடந்த 1991ல் ஓய்வு பெற்றார். 2002ல் ஒருநாள் கிரிக்கெட் அரங்கின் சிறந்த வீரராக 'விஸ்டன்' சார்பில் தேர்வு செய்யப்பட்டார்.

**தெரியுமா**

**நடிகையுடன் தொடர்பு**

தனது 'சுப்பர்' ஆட்டத்தால் ரசிகைகளின் மனதை சுலபமாக கொள்ளை அடித்தார் ரிச்சர்ட்ஸ். இவரது வலையில் பிரபல பொலிவுட் நடிகை நீனா குப்தா சிக்கினார். இருவருக்கும் இடையே நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. இவர்களுக்கு 1989ல் மசாபா என்ற பெண் குழந்தை பிறந்தது.

கடந்த 1974ல் நடந்த 'பிபா' உலக கிண்ணக் கால்பந்து தொடருக்கான தகுதிச் சுற்றில் ஆன்டிகுவா மற்றும் பார்படோஸ் அணிக்காக ரிச்சர்ட்ஸ் விளையாடியதாக கூறப்படுகிறது. ஆனால் இப் போட்டிகளில் இவர் பெரிய அளவில் சாதிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு துளைக்காத வாகனத்தை நிராகரித்தார் கர்தினால் ஆண்டகை



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய குண்டு துளைக்காத மோட்டார் வாகனத்தை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நிராகரித்துள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

மேலும் தனக்கு இச் சந்தர்ப்பத்தில் முக்கியமானது நாட்டு மக்களது பாதுகாப்பே எனச்சுட்டிக்காட்டிய அவர் நாட்டில் நிலவும் நிலைமை தொடர்பில் திருப்தியடைய முடியாதுள்ளதாக மீண்டும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிலப்பதிகார விழா பிற்போடப்பட்டுள்ளது

**அகில இலங்கை இளங்கோ கழகம் புலமை ஒலி- 2019 சிலப்பதிகார விழா**


மே மாதம் 03 ஆம், 04 ஆம், 05 ஆம் திகதிகளில் புற்றளை மகா வித்தியாலயத்தில் இடம்பெற இருந்த மேற்படி விழாவானது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

விழா தொடர்பான தகவல் பின்னர் எம்மால் அறியத் தரப்படும்.

த. குருபரன்,
செயலாளர்,
அகில இலங்கை இளங்கோ கழகம்,
புலோலி, யாழ்ப்பாணம். (8628)

# 06 ஆம் ஆண்டு நினைவு நாள்

பார்வதி மடியில்
23
03
1939



பரமசிவன் அடியில்
01
05
2013

## சந்திரவளவின் மூத்த சூரியன் சின்னையா சின்னத்தம்பி (தங்கராசா)

"அப்பா" எனும் புத்தகம் எங்கள் கைகளில்
தவழ்ந்த வேளை எங்களால்
படிக்க முடியவில்லை- இன்று
புத்தகத்தை புரட்டிப் பார்க்கத் துடிக்கின்றோம்
"அப்பா" எம் அருகில் நீங்களில்லை...
அமைதியாக உறங்குங்கள்
அனுதினமும் வணங்கிடுவோம்.

(கி-6241)

வெல்லம்புத்தை
கரவெட்டி மத்தி, கரவெட்டி. குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**மாணிக்கவாசகர் மணிவேந்தன்**

அன்னை மடியில்- 28.03.1985
ஆண்டவன் அடியில்- 06.11.2018
திதி:- அபரபக்க சதுர்த்தசி

கடந்த 06.11.2018 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப மணி விளக்கின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வருகை தந்து ஆக வேண்டிய காரியங்களை முன்னெடுத்தாற்றிய உறவுகள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், பதாதைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் தூரதேச தொலைபேசி அழைப்பின் மூலமும் தங்கள் ஆறுதல்களை தெரிவித்தோர் மற்றும் துக்கம் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (02.05.2019) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவுகூர்ந்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.** (கி-6240)

பெரியதோட்டம், வதிரி, கரவெட்டி. குடும்பத்தினர்.

# இராசி பலன்

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்களின் தகுதியை உயர்த்தும், போசன சுகமுண்டு, முயற்சியில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள்.

**மிதுனம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், பிறர் உதவியுண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், போசன நன்மையுண்டு.

**கும்பம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்தகாரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சந்., சுக் | சூரி,புத | செவ் | ராகு |
| | இராசி பலன் — கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் பூசம், உத்தராடம் | | |
| சனி, குரு, கேது | | | |

01.05.2019
சித்திரை 18, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துவாதசி பின்னிரவு 2.32 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 11.21 மணிவரை
சுபநேரம் 4.27-5.57 மணிவரை
இராகுகாலம் 11.57-1.27 மணிவரை
தொழிலாளர் தினம்
அமிர்த சித்தம்.
வளவன்

**கடகம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம்.

**மகரம்:** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம், உறவினர்கள், நண்பர்கள் தொடர்பில் சிறு முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**தனுசு:** கற்பனை மிகுதியான நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வார்த்தையில் நிதானம் தேவை.

**துலாம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கன்னி:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள். விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# குருநகரில் அதிரடிப்படையினர் சுற்றிவளைப்பு

# வாள், வெளிநாட்டு சிகரெட் பெட்டிகள் மீட்பு!









## இருவர் விசாரணைக்காக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டு வகை சிகரெட் பெட்டிகள், வாள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

நேற்று அதிகாலை முதல் இராணுவத்தினர் கடற்படையினர், விசேட அதிரடிப்படையினர் இணைந்து யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்த சுற்றிவளைப்பு தேடுதலின் போது குருநகர்ப்பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து பெருமளவிலான வெளிநாட்டு புல்லட் வகையான சிகரெட் கைப்பற்றப்பட்டதுடன் வீட்டின் உரிமையாளரும் விசாரணைக்காக பொலிஸாரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அத்துடன், குருநகர் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. வாள் கண்டெடுக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் பல சுற்றிவளைப்புக்கள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று அதிகாலை முதல் சுமார் 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்ற நிலையில் இந்த வெளிநாட்டு வகை சிகரெட் பொருட்கள் மற்றும் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10-101)

## யாழ்பாடி மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினூடாக யாழ்ப்பாணம் பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள மலரான யாழ்பாடி கலாசார மலர் 3 இற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

"மேம்பட்ட சமூக விழுமியங்களும் வளமான சமூகமும்" எனும் தொனிப்பொருளில் கலை, ஆன்மீகம், கல்வி, கலாசாரம், போதைப் பொருள் விழிப்புணர்வு, சிறுவர், முதியோர் தொடர்பாக உரிமையும் பாதுகாப்பும், உளவியல் தாக்கங்களை குணப்படுத்தல், துஷ்பிரயோகங்களை தடுத்தல், பொருளாதார அபிவிருத்தி, இளையோர் எதிர்கொள்ளும் சவால்கள், நிறுவனங்களின் பங்களிப்பு, இலக்கியங்களின் பங்களிப்பு பெண்கள் மற்றும் இவையூடாக சமூக விழுமியங்களை பேணி வளமான சமூகத்தை உருவாக்குதல் தொடர்பாக கட்டுரை, கவிதை, சிறுகதை, நேர்காணல் போன்ற ஆக்கங்களை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் யாழ்.பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலர்களும் சமர்ப்பிக்க முடியும். கிடைக்கப்பெறும் ஆக்கங்களிலிருந்து மலர்க் குழு வால்தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மலரில் பிரசுரிக்கப்படும்.

ஆக்கங்களை 31.05.2019 இற்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பிரிவிற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான எஸ்.சுதர்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## நல்லூரில் அநாதரவாக நின்ற மோட்டார் சைக்கிளால் பரபரப்பு

### இருக்கையைக் கழற்றிச் சென்ற பொலிஸார்



(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் பாரதியார் சிலைப் பகுதியில் நேற்றுக் காலை நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் இருக்கையை பொலிஸார் கழற்றிக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்றனர்.



குறித்த பகுதியில் நீண்ட நேரமாக உரிமையாளர் வராத நிலையில் தரித்து நின்ற மோட்டார் சைக்கிள் தொடர்பாக சந்தேகம் கொண்ட அப்பகுதி மக்கள் யாழ்.பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டதோடு குறித்த மோட்டார் சைக்கிளின் இருக்கையை கழற்றிச் சென்றதுடன் உரிமையாளர் வந்ததும் யாழ்.பொலிஸ் நிலையம் வருமாறு கூறுங்கள் என அப்பகுதியில் நின்றவர்களிடம் கூறிச் சென்றனர். (இ-10-1089)

## மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புற்றளை மகா வித்தியாலய மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பெற்றோர்கள், பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் இன்று முதலாம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென பாடசாலை அதிபர் கி.குகநாதன் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களது பெற்றோர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

>>>>>>>>>>>>>>>>>>>

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி, யாழ்.ஸ்ரீசோமாஸ்கந்த ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முறையே காலை 8.30, முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பாக கலந்துரையாட இருப்பதால் அனைத்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

## பொதுச்சுகாதாரப் பிரிவு நல்லூரில் உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 3 கிராம உத்தியோகத்தர் பிரிவை ஒன்றிணைத்து புதிய பொதுச் சுகாதாரப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. ஜே/110, ஜே/111, ஜே/114 ஆகிய கிராம உத்தியோகத்தர் பகுதிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட இந்த பொதுச் சுகாதாரப் பிரிவு நாளை 2 ஆம் திகதி தொடக்கம் செயற்பாடுகளை ஆரம்பிப்பதோடு குறித்த பகுதியின் சுகாதாரப் பரிசோதகராக தி.கிருபன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-10-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலுள்ள தீவிரவாதிகளுக்கும் ஐ.எஸ்ஸுக்கும் 15 வருடங்களாக தொடர்பு

# புலனாய்வில் ஏற்பட்ட தோல்விக்காக நான் பதவிவிலகப் போவதில்லை

## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கும் ஐ.எஸ் . ஐ.எஸ். அமைப்பினருக்கும் தொடர்புகள் உள்ளன என இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர் கருதுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கு ஐ.எஸ். அமைப்பு பயிற்சிகளை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி இலங்கையில் உள்ள தீவிரவாதிகளுக்கும் ஐ.எஸ். அமைப்பினருக்கும் இடையிலான தொடர்பு 15 வருடத்திற்கு மேற்பட்டது எனவும் தெரிவித்தார்.



புலனாய்வு தோல்வி காரணமாக தான் பதவி விலக வேண்டும் என முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிராகரித்துள்ள மைத்திரி முன்னெச்சரிக்கைகளை தனது அதிகாரிகளும் அமைச்சர்களும் உரிய விதத்தில் கையாளவில்லை என்வும் குற்றம் சாட்டினார்.

குண்டுதாக்குதல்கள் இடம்பெற்றவேளை பாதுகாப்பு செயலாளராக இருந்த ஹேமசிறி பெர்னாண்டோவும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவும் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் கவனமற்றவர்களாகவும் பொறுப்பற்றவர்களாகவும் காணப்பட்டனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இவ்வாறான கொடூரே சம்பவங்கள் இடம்பெறும் என அவர்கள் நினைக்கவில்லை.

இலங்கையில் பாரிய தாக்குதல்கள் இடம்பெறலாம் என கிடைத்த தகவல்கள் குறித்து எனக்கு அவர்கள் அறிவிக்கவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதமருக்கும் தனக்கும் இடையில் உள்ள முறுகல்நிலையே இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு காரணம் என விமர்சனங்களை முன்வைப்பவர்களை மைத்திரி சாடியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு என வரும் போது எங்கள் மத்தியில் எந்த கருத்துவேறுபாடுகளும் இல்லை மத வேறுபாடுகளும் இல்லை இனவேறுபாடுகளும் இல்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாடுபாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக நானும் பிரதமரும் அரசாங்கத்தில் உள்ளவர்களும் ஒரேமாதிரியாக சிந்திக்கின்றோம் எனவும் ஜனா திபதி மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7


பழமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றொங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**MG பாம், உடுப்பிட்டி**

**உடன் தேவை...**

- ஊர்ச்சேவல்கள்
- முட்டை இடும் சிவப்பு நிற முட்டைக் கோழிகள்

தொடர்புகளுக்கு
077 179 4796
(C-6238)

**பெயர் மாற்றம்**

கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட பெருமாள் பெருமாள்க்கா ஆகிய எனது பெயரை பெருமாள் புஸ்பராணி என மாற்றம் செய்து இனி வரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையேபயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
பெருமாள் புஸ்பராணி
(8629)


## திறந்த கேள்வி கோரல்

23.02.2019 திகதியன்று எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட **NPRE 0998** மகேந்திரா உழவியந்திரத்தினை விற்பனை செய்வதற்கென தீர்மானிக்கப்பட்ட முகாமைக்குழுத் தீர்மானத்திற்கமைவாக குறித்த மகேந்திரா உழவியந்திரத்தினை 17.04.2019 அன்று திறந்த கேள்வி மூலம் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இவ் அறிவித்தலுக்கமைய குறித்த தினத்தில் எவரும் உரிய நேரத்தில் சமுகமளிக்காமையால் மீண்டும் 10.05.2019 வெள்ளிக்கிழமை **மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல தலைமையலுவலகம், ஜெயந்தி நகர்** என்னும் முகவரியில் காலை 10 மணிக்கு இதனைப் பெற விரும்புவோர் மற்றும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் நேரில் வந்து கேள்வியினை கோரிப் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பு: இதற்கான ஆரம்பக் கேள்வி ரூபா 700,000 (ஏழு இலட்சம்) ஆகும். அதிகூடிய கேள்வி கோரி பெற்றுக்கொள்வோர் பணம் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றதன் பின்னரே உழவியந்திரத்தினை இல்லத்திலிருந்து வெளிக்கொண்டு செல்ல அனுமதிக்கப்படும்.

தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
(C-6243)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 34 ½ செவ் 1 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: A/L, Customer Service Assistant,UK<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்,உள்நாடு<br>தொ.இ: B/9601 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 41<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MAபட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச,தனியார் தொழில். உள்நாடு<br>தொ.இ: G/9602 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L,வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: தொழில் /தொழிலற்றவர்கள் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/9605 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 2 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்.<br>தொ.இ: G/9603 |
| பிறப்பு: 1973கிறிஸ்தவம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: கிறிஸ்தவ,A/L படித்த பெண். விவாகரத்தானவர்கள், கணவரை இழந்தவர்கள் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/9609 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்ததொழில்.<br>தொ.இ: G/9606 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L,காசாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு,கிறிஸ்தவமும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/9610 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: 31 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:M.Sc, BIT, Lecturer<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம், பட்டதாரி Doctor, Engineer, Lecturer.<br>தொ.இ: G/9607 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்பில் 18 சிறுவர்களுக்கு முதல் நன்மை நிகழ்வு



(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினர் பொலிஸாரின் தீவிர சோதனைகளுக்கு மத்தியில் 18 சிறார்களுக்கு ஆலய பங்குத்தந்தை அருட்பணி செபஸ்தியாம்பிள்ளை இராஜநாயகம் தலைமையில் காலை 7 மணிக்கு இடம்பெற்ற திருப்பலியில் முதல் நன்மை அருட்சாதனம் வழங்கி வைக்கப்பட்டது.

ஆலயத்திருப்பலிக்கு முன்னதாக சிறப்பு அதிரடிப்படையினர் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் ஆலய வளாகத்தில் தேடுதல்கள் சோதனைகள் தீவிரப் படுத்தப்பட்டு பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்ட பின்னர் ஆலய வழிபாடுகள் மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. (7)

## தமிழர்களுக்கு இடம்பெறும் அநீதிகளை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்

### காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத் தலைவி ஈஸ்வரி வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸார் இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் போராளிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும் என வடக்கு- கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க முல்லைத்தீவு மாவட்ட தலைவி ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

இதேபோன்று சத்தமின்றி தமிழர் மீது இடம்பெறும் அடக்குமுறைகளை இச்சம்பவத்தினூடாக சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழ் இனத்தின் மீது பாரிய இனப்படுகொலை நடந்தது. வான், தரை ,கடல்வழித் தாக்குல் இடம்பெற்று பல இலட்சம் மக்கள் அழிக்கப்பட்டும் பலர் காணாமல் ஆக்கப்பட்டுமுள்ளனர். உறவுகளைத் தொலைத்தவர்கள் வருடக்கணக்காகப் போராட்டங்களை நடத்தி தமக்கான நீதியை கேட்ட வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் இலங்கையில் கடந்த 21 ஆம் திகதி ஈஸ்டர் தினத்தில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதிலும் தமிழ் மக்களே அதிகளவானோர் கொல்லப்பட்டும் பாதிக்கப்பட்டுமுள்ளனர்.

இதன் உண்மை நிலையை இதுவரை அறிய முடியவில்லை. ஆனால் குறித்த சம்பவம் தொடர்பாக கண்டறிவற்கு உலக நாடுகள் இணைந்து வந்து விசாரணைகளை மேற்கொள்கிறது.

இது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இறுதி யுத்தத்தில் தமது உறவுகளை நேரடியாக இராணுவத்திடம் கையளித்த உறவுகள் பலர் சாட்சியாக இருந்து தமக்கான நீதியை கேட்கும் போது எதற்காக சர்வதேசமோ அரசோ எம்மை கண்டுகொள்ளவில்லை. எமக்கான நீதியை தரவில்லை என புரியவில்லை.

மட்டக்களப்பு வவுணதீவில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இரு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் போராளிகள் பலர் இலக்கு வைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்கள்.

ஆனால் இன்று குறித்த படுகொலையை செய்தது தாமே என தீவிரவாதிகள ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும் அன்று காணாமல் போன பொலிஸாரின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில் எதற்காக அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

இதைப்போல தான் தமிழர் மீது பல அடக்குமுறைகளும் அநீதிகளும் இடம்பெறுகின்றன. காரணமில்லாத கைதுகள் தொடர் கிறது இதை சர்வதேசம் கவனத் தில் எடுத்து தமிழருக்கான நீதியை பெற்றுத்தர முன் வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (7-281)

## கோட்டை மாநகர சபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

வாள்கள் உள்ளிட்ட பல ஆயுதங்களை தம்வசம் வைத்திருந்த ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் எச்.எம்.எல். உஸ்மான் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவரது சகோதரரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர்களிடமிருந்து 3 வாள்கள், கத்தி என்பன கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

## பலத்த பாதுகாப்புடன் நடைபெற்ற இறுதிச்சடங்கு



(பரந்தன்)

உயிரிழந்தவரின் இறுதிச் சடங்குகளை நடத்துவதிலும் கிளிநொச்சி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் உயிரிழந்த நபர் ஒருவரின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி புனித திரேசாள் தேவாலயத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியிலேயே இடம்பெற்றது.

அண்மையில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலின் எதிரொலிப்பாக தேவாலயங்களில் இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனையை தொடர்ந்து படையினரின் இரு பவல் வாகனங்களின் நடுவில் சடலம் நல்லடக்கத்திற்காக எடுத்து செல்லப்பட்டது. (7-312)

## வெள்ளாங்குளக் காணியில் அத்துமீறினால் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்

### மாந்தை மேற்கு பிரதேச செயலர் எச்சரிக்கை



(மாந்தை)

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வெள்ளாங்குளக் காணியை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் வரையில் குறித்த காணிக்குள் பொதுமக்களை செல்ல வேண்டாம் என மாந்தை மேற்குப் பிரதேச செயலர் செ. கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளாங்குளப் பகுதியில் உள்ள 620 ஏக்கர் காணியில் முதற் கட்டமாக 230 ஏக்கர் காணியை பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கவுள்ள நிலையில் அதுவரையில் அக்காணிக்குள் சட்டவிரோதமாக யாரும் உட்செல்ல வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதோடு மீறி உள்நுழைந்தால் கடும்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரி வித்தார்.

ஆகவே பொதுமக்களுக்கு பிரதேச செயலகத்தால் காணி வழங்கப்படும் வரையில் பிரதேச செயலகத்தின் உத்தரவுகளையும் விளம்பரக் காட்சிப்படுத்தல்களையும் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார். (7-10-286)

## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

நாளை காலை 9 மணிக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க மணல் ஏலவிற்பனை இடம்பெறும் எனவும் ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலயத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார். (7)

## பகிரங்க ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 11 ஆம் திகதி (சனிக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு முல் லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது. (7)

## வவுனியா வீரபுரம் பகுதியில் டெட்டனேற்றர்கள் மீட்பு!

(குருமன்காடு)

வவுனியா வீரபுரம் பகுதியில் 24 டெட்டனேற்றர் குச்சிகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மீட்கப்பட்டதாக செட்டிகுளம் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் வீரபுரம் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வீதிக்கரையில் உள்ள பற்றை ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட 24 டெட்டனேற்றர் குச்சிகளையும், அதனுடன் இணைந்த வயர்களையும் மீட்டுள்ளனர்.

அத்துடன், கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து செட்டிகுளத்திற்குட்பட்ட பல பகுதிகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய வீரபுரம் பகுதியிலும் இராணுவத்தினரால் சோதனை சாவடி ஒன்று அமைக்கப்பட்டு பேருந்துகள், ஏனைய வாகனங்களில் பயணம் செய்யும் பொது மக்கள் முழுமையாக சோதனை செய்யப்பட்ட பின்னரே பயணிக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜிகாதிகளை உருவாக்கியதில் பிரதமருக்கும் பெரும் பங்கு
- சர்வதேச இராணுவத்தை களமிறக்கவே இச்சதி நடவடிக்கை
- பிரதமரால் மக்களுக்கு அச்சுறுத்தல்; இராஜினாமா செய்ய வேண்டும்



# அமெரிக்காவின் ஒரு பகுதியாக இலங்கையை மாற்ற ரணில் முயற்சி

## மகிந்த அணி வாசுதேவ கடும் தாக்கு



(கொழும்பு)

**இலங்கையை அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்றுவதற்குத் தேவையான உதவிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டு வருவதாக மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார விமர்சித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "இலங்கையில் இடம்பெற்ற தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும்.

பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு இடைக்கால அரசாங்கம் ஒன்று கொண்டுவரப்பட்டு தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இஸ்லாமிய தீவிரவாதத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனக்கு தேவையான வகையில் பயன்படுத்திக்கொள்ளவே பார்க்கிறார். இதன் ஊடாக பயங்கரவாதச் சட்டத்தை பயன்படுத்தவும், சர்வதேசத்தின் இராணுவத்தை இலங்கைக்குள் களமிறக்கவே அவர் முயற்சிக்கிறார்.

இன்று அனைத்து இடங்களிலும் அமெரிக்காவின் தலையீடு காணப்படுகிறது. அவர்களின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அமெரிக்காவின் ஒரு பகுதியாக இலங்கையை மாற்றுவதற்கு தேவையான உதவிகள் அனைத்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும், ஜிகாதிகளை உருவாக்கியதிலும் பிரதமருக்கு பெரிய பங்கு உள்ளது. இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன. சந்தேகத்திற்கிடமான பொருட்கள்மீட்கப்படுகின்றன.

அமெரிக்கா என்பது ஜிகாத் வாதத்துக்கு எதிரான கடுமையான போக்கையே கடைப்பிடிக்கிறது. அதேபோல், ஜிகாதிகளும் ஐக்கிய அமெரிக்காவை தங்களது எதிரியாகவே பார்க்கிறார்கள்.

இவை அனைத்தையும்தெரிந்து கொண்ட புலனாய்வுத் துறையினர், பல்வேறு விடயங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பிலான அனைத்துத் தகவல்களும் அரசாங்கத்திடம் இருந்துள்ளன. இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பிலான தகவல்களும் இந்திய புலனாய்வுத் துறையினரால் அரசாங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளன. எனினும், அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் பொறுப்புக்கூற வேண்டும்.

சர்வதேச இராணுவத்தை இலங்கைக்குள் கொண்டுவரும் நோக்கிலேயே இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த குற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்காது போனதுடன், சர்வதேசப் பயங்கரவாதத்தை தடுப்பதற்கு இலங்கையில் சட்டமில்லை என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். இவையெல்லாம் பாரதூரமான செயற்பாடுகளாகும். இவ்வாறான ஒரு பிரதமர் நாட்டில் இருப்பது மக்களுக்கான அச்சுறுத்தலாகவே இருக்கிறது. அவர் சரியாக இருந்தால் தனது பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

## சோதனையின் போது ராணுவச் சிப்பாய்க்கு குடிநீர்ப் போத்தல் வழங்கிய சிறுமி





(கல்முனை)

கல்முனைப்பகுதியில்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய்க்கு சிறுமி ஒருத்தி குடிநீர்ப் போத்தல் வழங்கியுள்ளாள்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போதே குறித்த சிறுமியால் குடிநீர்ப் போத்தல் வழங்கப்பட்டது. (இ-10)

## பால கதிர்காமம் புனரமைப்பு

நல்லூர் பால கதிர்காமம் தேவஸ்தானப் பனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்த என்.இராதாகிருஷ்ணன் குழுவினரால் சிற்ப வேலைகளும் வர்ணப்பூசும் வேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

ஊர் மக்களின் அன்பளிப்பும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலய புனரமைப்பு வேலைகள் அடுத்த ஆண்டுத் திருவிழாவுக்கு முன்னர் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-10-272)

66 வது அகவை நீங்கா நினைவலைகள்
அமரர்.
திரு. நடராசா நகுலேந்திரராஜா

(8923)
பிறப்பு 01.05.1953
இறப்பு 31.12.2018
அன்பின் திருவுருவே
பாசத்தின் இருப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே
தன்னை தீயமாக்கி
தரணியில் எமைக்காத்த
உனக்கு அவனியிலே
அர்ப்பணமாய்
கண்ணீர்ப் புஷ்பங்களைக்
காணிக்கையாக்குகின்றோம்
V.H.லேன்,
இருபாலை.
என்றும் உன் நினைவில்
சகோதர, சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளவேனில் கால உணவுமுறை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உடல் நலத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது உணவாகும். நோயின்றி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒழுக்கமான உணவு முறை அவசியம். திருவள்ளுவர், மருந்து எனும் 10 பாடலில் 6 பாடல் நோயைப் பற்றி அமைத்துள்ளார். நாள் ஒழுக்கத்தில் கூட ஒரு நாள் முழுவதும் உணவின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருத்தல் அவசியம். அத்துடன் பருவகாலங்களை அனுசரித்தும் அக்காலங்களில் ஒழுக வேண்டிய, தவிர்க்க வேண்டிய உணவுகளை அறிதல் வேண்டும். சூழல் காரணிகளும் மனித உடல் ; உள நிலைகளில் பாதிப்பை ஏற்படுத்தவல்லன.

எனவே பருவ காலங்களும் சூழல் மாறுபாட்டை ஏற்படுத்துவதால் அதற்கு இயைந்து வாழல் அவசியம். உதாரணமாக சூரியன் சஞ்சரிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு வருடம் உத்தராயணம், தட்சணாயனும் என 2 ஆக பிரிக்கப்பட்டு தை- ஆனி வரையான 6 மாத காலம் உத்தராயணம் எனவும் ஆடி- மார்கழி வரையான 6 மாதம் தட்சணாயம் எனப்படுகின்றது.

இதில் உத்தராயணம் தைப் பொங்கலுடனும் தட்சணாயம் ஆடிப் பிறப்புடனும் ஆரம்பமாகின்றது. இவை உணவினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமாகும் நிகழ்வாக அமைகின்றது. எனவே உணவுகள் முக்கியத்துவம் பெறுகின்றது.

காலை உணவுகள் பற்றி மக்களிடையே தவறான கருத்துக்கள் காணப்படுகின்றன. காலை உணவு என்பது முக்கியமானது. காலை உணவுகளை தவிர்த்தல் கூடாது. உண்ணா நோன்பு இருக்கும் காலங்களில் தவிர்க்கலாம். சூரியன் உதயமான நேரத்திலிருந்து 6 மணி நேரத்திற்குள் செரிமான ஆற்றல் அதிகமாக இருக்கும் என சித்தர்கள் கூறியுள்ளார்கள். அந்த நேரத்தில் உடலிற்கு ஊட்டமளிக்கும் சத்தான உணவை உண்ண வேண்டும். உடல் எடையை குறைப்பதற்காக சிலர் காலை உணவை தவிர்க்கிறார்கள். காலை உணவை தவிர்ப்பதால் உடல் எடை கூடுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. காலை உணவிற்காக 20 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும்.

இளவேனில் காலமாகிய சித்திரை- வைகாசியில் கபம் வேற்று நிலை விருத்தியடைவதால் கப சம்பந்தமான நோய்கள் ஏற்படவாய்ப்புண்டு எனவே சமநிலைக்குக் கொண்டு வர கைப்பு, கார்ப்பு சுவையுள்ளதும் இலகுவான உணவும் சிறந்தது. இந்தக் காலங்களில் வேம்பும் பூப்பதால் வேப்பம் பூவும் உணவுகளில் சேர்க்க வேண்டும். வேப்பம் பூ இரத்தத்தை சுத்திகரிக்கும், கிருமிகளைக் கொல்லும், கொலஸ்ரோலை கட்டுப்படுத்தும் தன்மையும் உண்டு. ஆகவே வேப்பம்பூ வடகம், துவையல் செய்து உண்ண வேண்டும். இதனால் கபம் கொழுப்பு முதலியன கட்டுப்படும்.

இளவேனில் காலத்தில் இலுப்பம் பூவும் முக்கிய இடம் வகிக்கின்றது. இலுப்பம் பூக்களை சேகரித்து வெயிலில் காயவைத்து அல்லி தட்டி, வறுத்து, இடித்து துவையல் செய்து பயன்படுத்தலாம். இனிப்பு சுவையுடையது. சுவாசாய நோய்களை கட்டுப்படுத்தும். இதில் Cal $Po_4 3$ உள்ளதால் மூட்டுக்கள், என்புகளை பாதுகாக்கும் இரும்பு சத்தும் உண்டு. இள்வேனில் காலம் முடியவரும் முதுவேனில் காலத்தில் விருத்தியாகும் வாத நோய்களை கட்டுப்படுத்தும் வல்லமையும் உண்டு. மற்றும் இளவேனில் காலத்தில், இலகு குணமானதும் இலகுவாக சமிபாடடையக் கூடியதுமான கஞ்சி உணவுகள் பயன்படுத்தக் கூடியது. சிவப்பு, பச்சரிசி , முளை விட்ட பயறு, பிஞ்சுக் கத்தரிக்காய், முருங்கக்காய் என்பனவும் இரத்தத்தை சுத்திகரிக்கக் கூடியது. இதேபோல் வெந்தயக் கஞ்சி, இலைக்கஞ்சி போன்றவற்றையும் தாராளமாக பயன்படுத்தலாம்.

இலுப்பைப்பூ இனிப்புச்சுவையுடையது. எனினும் இலுப்பைப் பூ துவையல் சுவாசாய நோயை கட்டுப்படுத்தக் கூடியது. ஏனெனில் துவையலில் சேரும் மிளகு, உள்ளி, செத்தல் மிளகாய் என்பன கார்ப்பு சுவையுடையதால் விருத்தியடையும் கபத்தை கட்டுப்படுத்தக் கூடியது.

காலையுணவில் கொழுப்பு, எண்ணெய் இல்லாமலோ/ மிகக் குறைந்த அளவிலோ இருக்க வேண்டும். அதிகக் கொழுப்பு, மந்தம் ஏற்படுத்தும் பொருட்கள் காலையில் இருந்தால் மூளைச் செயற்பாடு குறையும். மனக் குவிப்புத் திறனையும் குறைக்கும்.

முளைகட்டிய பயறு வகைகள், பழங்கள், கீரைகள், காய், தேங்காய் போன்றவற்றாலான உணவுகள் அதிகம் இருக்க வேண்டும். அதிகமான நார்ச்சத்தும் ஊட்டச் சத்துக்களும் இருக்க வேண்டும். உணவில் குறைந்தளவு கலோரி இருக்க வேண்டும். பழங்கள், பாதாம், தேங்காய், இஞ்சி, கீரைகள் கலந்து அரைத்த கூழ்மக் கலவை மிகச் சிறந்த காலை உணவாகும்.

முளை கட்டிய பாசிப் பயறுடன் பச்சைப்பயறு, இஞ்சி, பூண்டு, சிறிய வெங்காயம், நாட்டுத் தக்காளி, சீரகப்பொடி, சிறிது உப்பு, மோர் கலந்து 1/2 மணி நேரம் ஊறவைத்து உண்ணலாம். இது எல்லாம் பச்சையாக வேக வைக்காமல் இருப்பதால் முதலில் குறைந்த அளவே உண்ண வேண்டும். படிப்படியாக அளவை கூட்டிக் கொள்ளலாம்.

எடையக் குறைக்க விரும்புபவர்கள் தேங்காய், பழம், கீரைச்சாறு மட்டும் காலை உணவாக எடுத்துக் கொள்ளலாம். உளுந்து, வெந்தயம், சுக்கு, பூண்டு, பனை வெல்லம், தேங்காய்ப்பால் கலந்து செய்த சிறந்த காலை உணவாகும். இட்லி, தோசை போன்றவை செய்வதாக இருந்தால் தோலுடன் உளுந்தை (கறுப்பு உளுந்து) ஊற வைத்து வெந்தயம் சேர்த்து அரைத்து பயன்படுத்த வேண்டும். கட்டாயம் வேக வைத்த காய், தேங்காய் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

- பாசிப்பருப்பு, அரிசி, இஞ்சி, சீரகம், நல்லெண்ணெய் சேர்த்துச்செய்யும் பொங்கலுடன் தேங்காய் சட்னி வேக வைத்த காய் சேர்த்து ஊட்டமான காலை உணவைச் செய்து கொள்ளலாம்.
- 3/4 விதமான பழங்களை வெட்டிப் போட்டுத் தேன், இஞ்சித் துண்டுகள், ஊறவைத்த வேர்க்கடலை, தேங்காய்த் துருவல், மிளகுத்தூள், சிறிது உப்புத்தூள் கலந்து 15 நிமிடம் ஊறவிட்ட பின்பு சாப்பிடலாம்.
- நவதானியக் கஞ்சியுடன் ஏலக்காய், கிராம்பு, பனை வெல்லம், தேங்காய்துருவல், பழத்துண்டுகள் கலந்து சாப்பிடலாம்.

காலை உணவின் பலன்கள்

- நாள் முழுவதும் நலமுடன் வேலை செய்வதற்குக் காலை உணவு முக்கிய காரணமாக அமைகின்றது.
- சிறந்த நினைவாற்றல் ஏற்படவும் மூளை சுறுசுறுப்புடன் செயற்படவும் மனதின் ஆற்றல் மேம்படவும் முக்கியமான முடிவுகளை விரைவாக எடுப்பதற்கும் சிறந்த காலை உணவு உதவுவதாகப் பல ஆய்வுகள் கூறுகின்றன.
- பசி உணர்வு சீராக இருப்பதற்கும் சீரண மண்டலம் சிறப்பாகச் செயற்படவும் வளர்சிதை மாற்ற நிகழ்வுகள் இயல்பாக நடக்கவும் காலை உணவு உதவுகின்றது.
- காலை உணவு உடல் பருமன் ஏற்படுவதைத் தடுக்கின்றது. காலையில் ஊட்டமான உணவு உண்பதால் பசி உணர்வு சீராகி மதியம், இரவு உணவின் அளவு கட்டுப்பட்டு உடல் எடை கூடுவது கட்டுப்படுகின்றது. தொப்பை ஏற்படுவதும் தடுக்கப்படுகின்றது. காலை உணவு குறைந்தால்/ சாப்பிடாமல் விட்டால் மதிய உணவு அதிகம் உண்ணவேண்டிய அவசியம் உடலிற்கும், மனதிற்கும் ஏற்படுகின்றது. இதனால் சீரான செரிமானமும் வளர்சிதை மாற்ற நிகழ்வுகளும் பாதிக்கப்படுகின்றன. வயிறு, குடல் பகுதிகளில் காற்றுத் தங்கி வயிற்று உப்பிசம் (Floating Abdomen) ஏற்படுகின்றது. பல ஆய்வுகள் காலை உணவின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

காலையில் தொடர்ச்சியாகக் கீரை உணவினை உண்பதால் ஒருவரின் செயல் மேம்படுகின்றது. வாழ் நாள் முழுவதும் ஊக்கத்துடன் செயற்பட முடிகின்றது. உயர்ந்த குறிக்கோளை அடைய வழிவகுக்கின்றது.

- நீண்ட நாட்கள் நோயின்றி வாழ வழியாகின்றது.
- முறையான காலை உணவால் இரத்த சர்க்கரை அளவு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். இன்சுலின் செயற்பாடு மேம்படுவதற்கும் இது உதவியாகின்றது.
- இரத்தம் ஓட்டம் சீராகி அதிக இரத்த அழுத்தம் கட்டுப்படுவதற்குக் காலை உணவு உதவுகின்றது. இதனால் இதய நோய், மூளை பாதிப்பு வருவது தடுக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும் பல நோய்கள் வருவதைக் காலை உணவு தடுக்கின்றது. ஒவ்வொரு நாளும் உண்ணும் ஊட்டமான காலை உணவு வாழ் நாள் முழுமையும் நன்மை காக்கும்.



- இளவேனில் காலத்தில் மதிய உணவில் அரிசி, வரகு, கம்பு, சாமை, திணை, உளுந்து பாசிப்பயறு போன்ற தானிய உணவுகளையும் சேர்த்தல் வேண்டும். கீரைகளையும் காய்கறிகளையும் அதிகம் உணவில் எடுக்க வேண்டும்.

மதிய உணவு உண்பதற்கு போதிய நேரம் ஒதுக்க வேண்டும். உண்ணும் போது சுவைத்து உணவில் மனதில் செலுத்தி உண்ண வேண்டும்.

- இரவு உணவு 6.30 - 7.30 மணிக்குள் எடுக்க வேண்டும். உண்ட பின் 2 மணிநேரம் கழித்து உறங்க வேண்டும். படுக்கும் போது தேன் கலந்த நீர், பழச்சாறு, மிளகு கலந்த மோர் என்பவற்றை அருந்தி ஒரு மணிநேரம் கழித்து உறங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபம் இராணுவத்தால் புனரமைத்து கையளிப்பு

(குருமன்காடு)

வவுனியா, குடியிருப்பு கலாசார மண்டபம் இராணுவத்தால் புனரமைக்கப்பட்டு நேற்று மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபாவிடம் கையளிக்கப்பட்டது.

வன்னிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா வின் வழிகாட்டலின் கீழ் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் இக் கலாசார மண்டபத்தை இராணுவத்தினர் மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் வன்னி படைக் கட்டளைத் தளபதி, மாவட்ட அரச அதிபர், இராணுவ அதிகாரிகள், பிரதேச செயலாளர் கா.உதயராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (7-250)





# மருத்துவ நிர்வாக சேவையில் 146 புதிய நியமனங்கள்

(பரந்தன்)

நேற்று முன்தினம் சுகாதார அமைச்சினால் 146 புதிய மருத்துவ நிர்வாக சேவை நியமனங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்கள் மூலம் இதுவரை வெற்றிடமாகக் காணப்பட்ட பிரதி மருத்துவ நிர்வாக சேவை (Deputy Administrative Grade) பதவிகள் சகலதும் நிரப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடெங்கும் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவுகளில் வினைத் திறனான சேவை வழங்கலை உறுதி செய்யும் நோக்குடன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் ஆகியோர் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக தகுதி வாய்ந்த மருத்துவ நிர்வாக சேவை ஆளணியினர் வெற்றிடமாக காணப்பட்ட இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வடக்கில் நியமிக்கப்பட்டுள்ள பெரும்பாலானவர்கள் சிங்கள வைத்திய அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள்

யாழ்.மாவட்டம்

1.வைத்தியர் C.S யமுனா நந்தா பிரதிப் பணிப்பாளர் யாழ்.போதனா வைத்தியசாலை.

2.வைத்தியர் R.D.G விமல சேன வைத்திய அத்தியட்சகர் ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை.

3.வைத்தியர் R.M.S.L ரத்னாயக்கா வைத்திய அத்தியட்சகர் ஆதார வைத்தியசாலை வேலணை.

4.வைத்தியர் S.தனபால வைத்திய அத்தியட்சகர் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி.

வவுனியா மாவட்டம்

1.வைத்தியர் K.தவயோக ராஜா பிரதிப் பணிப்பாளர் மாவட்டப் பொது வைத்தியசாலை வவுனியா.

2.வைத்தியர் S.C.S சூரியாராச்சி வைத்திய அத்தியட்சகர் ஆதார வைத்தியசாலை செட்டிகுளம்.

கிளிநொச்சி மாவட்டம்

1.வைத்தியர் K.W.M.N மாப்பிட்டிகம பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்- கிளிநொச்சி.

2.வைத்தியர் D.M.S திசாநாயக்க பிரதிப் பணிப்பாளர் மாவட்டப் பொது வைத்தியசாலை கிளிநொச்சி.

மன்னார் மாவட்டம்

1.வைத்தியர் D.வினோதன் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மன்னார்.

2.வைத்தியர் J.U.B ரத்னாயக்கா பிரதிப் பணிப்பாளர் மாவட்டப் பொது வைத்தியசாலை மன்னார்.

முல்லைத்தீவு மாவட்டம்

1.வைத்தியர் M.S உமா சங்கர் பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் முல்லைத்தீவு.

2.வைத்தியர் K.A.R.P ஜெயதிலக பிரதிப் பணிப்பாளர் மாவட்டப் பொது வைத்தியசாலை முல்லைத்தீவு போன்றவர்கள் வடக்கில் நியமிக்கப்பட்டுள்ளனர். (7-312)

# டெட்டனேட்டர் குச்சிகளுடன் 4 பேர் கைது; விடத்தல் தீவில் படையினர் கடும் சோதனை



(மன்னார்)

அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு கிராமத்தில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை காலை 6 மணி முதல் முப்படையினர் இணைந்து திடீர் சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். விடத்தல்தீவு பகுதியில் நேற்று முன்தினம் மாலை டெட்டனேட்டர் குச்சிகளுடன் 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையிலே முப்படையினர் இணைந்து குறித்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வீடுகளுக்குச் சென்ற படையினர் வீடுகளை முழுமையாக சோதனையிட்டதோடு வீட்டில் உள்ளவர்களின் விபரங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட விடத்தல் தீவைச் சேர்ந்த 4 பேர் இராணுவத்தினரினால் அடம்பன் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அடம்பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு விசாரணைகளின் பின்னர் குறித்த 4 சந்தேக நபர்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (7-285)

# குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநாட்டில் நிதி திரட்டும் மாணவி

இலங்கையில் தற்கொலை குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக கனடாவில் வாழும் மாணவி இணையத்தில் நிதி திரட்டி வருகிறார்.

இலங்கையில் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று தேவாலயங்கள் மற்றும் நட்சத்திரக் ஹோட்டல்களில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையில் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் சிறுமி ஒருவர் நிதி திரட்டி வருவது மக்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பிரசாந்தி ரஜனிகாந்த் என்பவர், 2008 இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றவராவார். 17 வயதான இவர் ஆல்பெர்ட்டாவில் 12 ஆம் வகுப்பு படித்து வருகிறார். கோஃபண்ட்மீ (gofundme) என்னும் இணையத்தளம் மூலம் நிதி திரட்டி வருகிறார்.

இதுகுறித்து, அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கை என்னுடைய தாய்நாடு என்பதால் மட்டும் நான் நிதி உதவி செய்ய நினைக்கவில்லை. இந்த வெடிகுண்டுத் தாக்குதல் உலகளாவிய அளவில் பெரிய கவனத்தை ஈர்க்கவில்லை. இத்தனை உயிர்களை இழந்த பின்னும் இந்தப் பிரச்சினை தீரவில்லை.


30 ஆண்டுகளாக நடைபெற்ற மக்கள் போராட்டமும் படுகொலையின் சோகமும் இன்னும் இருக்கிறது. ஆனாலும் யாரும் உதவவில்லை. இந்நிலையில் இப்போது நடந்த தாக்குதலை அடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதன் மூலம் இலங்கையைக் காப்பாற்றுங்கள்.

இங்கு திரட்டப்படும் தொகை அனைத்தும் ஆசிரி வைத்தியசாலை மற்றும் கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் சிகிச்சைக்காகவும் அவர்களின் தேவைக்காகவும் பயன்படுத்தப்படும்" என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

மேலும், இவர் 1000 டொலர்கள் என்ற இலக்குடன் நிதி திரட்டலை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# அக்கராயன் பிரதான வீதியின் பாலம் புனரமைப்பு!





(திருமுறிகண்டி)

ஆயிரம் பாலம் புனரமைப்புத் திட்டத்தினூடாக அக்கராயன் பிரதான வீதியிலுள்ள பாரிய பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் செல்லும் பிரதான வீதியில் பழுதடைந்து காணப்பட்ட பாரிய பாலம் ஆயிரம் பாலம் புனரமைப்புத்திட்டத்தினூடாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. மேற்படி அக்கராயன் வீதியில் இப்பாலம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டமையால் மழை காலத்தில் மழை வெள்ளம் இப்பகுதியில் வீதியை மேவிப் பாய்ந்து செல்லும். இதனால் இப் பகுதியூடாக போக்குவரத்துச் செய்ய முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி யிருந்தனர்.

நேற்று முன்தினம் இப்பாலம் புனரமைப்பு வேலைகளை இடம்பெறும் பகுதிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பாலம் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டுக் கலந்துரையாடினார். (7)

# குரோதங்களைத் தூண்டும் கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பரப்ப வேண்டாம்

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக, சமூக வலைத்தளங்கள் ஊடாக குரோதத்தை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிட வேண்டாமென பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மக்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள போனி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிதியொதுக்கீடு

(டில்லி)

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள போனிபுயல் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழகத்திற்கு ரூபாய் 303.375 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னைக்கு தென்கிழக்கு பகுதியில் நிலைகொண்டுள்ள குறித்த புயலானது அடுத்த 36 மணிநேரத்தில் அதி தீவிர புயலாக மாறி நாளை மாலை ஒடிசாவை நெருங்க வாய்ப்புள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி ஆகிய பகுதிகளில் மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என எதிர்வுகூறியுள்ள வானிலை ஆய்வு நிலையம், மீனவர்களை கடலுக்குச் செல்லவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை போனிபுயல் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## தமிழகத்தில் விரைவில் உள்ளூராட்சி தேர்தல்

### ஓ.பி.எஸ்.உறுதி



(சென்னை)

தமிழகத்தில் விரைவில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளதென துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் தெரிவித்தார்.

திருமங்கலத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

"தமிழகத்தில் 4 தொகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட இடைத்தேர்தல் தற்போது நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சிகள் கூறுவதைப் போல இடைத்தேர்தல் சட்டப் போராட்டத்தினால் இடம்பெறவில்லை.

நான் பா.ஜ.கவுடன் இணையப்போவதாக சிலர் கூறும் செய்திகளில் உண்மையில்லை. தேர்தலில் போட்டியிட அனைவருக்கும் உரிமை உள்ளது. ஆனால் ஒருவருக்குத்தான் அதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அத்தோடு தேர்தல் ஆணையம் நடுநிலைத் தன்மையுடன், சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் செயற்படுகிறது. தமிழகத்தில் விரைவில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

## கனேடியர் உள்ளிட்ட மூவர் ஆயுத முனையில் கடத்தல்

(நைஜர்)

நைஜீரியாவில் கனேடியர் உள்ளிட்ட மூவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச விவகாரங்களுக்கான கனேடிய அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

எண்ணெய் உற்பத்தி நிலையம் ஒன்றில் பயணியாற்றிவந்த மூன்று பணியாளர்களே இவ்வாறு ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் கடத்திச்செல்லப்பட்டுள்ள மூவரையும் மீட்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நைஜீரியாவில் கனேடியர் உள்ளிட்ட மூவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளமைக்கு இதுவரையில் எந்தவொரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)



## அமெரிக்க பிரதி சட்டமா அதிபர் இராஜினாமா!



(வோஷிங்டன்)

அமெரிக்க பிரதி சட்டமா அதிபர் ரொட் ரொசென்ஸ்டெய்ன் தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நம்பகமான ஆதாரங்கள் கட்சி சாராதவை என்ற அடிப்படையில் தாம் எவ்வித அச்சமுமின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்தியதாக அவர் தனது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, ரொட் ரொசென்ஸ்டெய்ன் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி பதவியிலிருந்து விலகவுள்ளார்.

சட்டமா அதிபராக வில்லியம் பார் நியமிக்கப்பட்ட நிலையில், ரொசென்ஸ்டெய்ன் கடந்த மார்ச் மாதத்திலேயே பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

எனினும் ட்ரம்பின் ஜனாதிபதி பதவிக்கு சவால் விடுத்த குறித்த விசாரணைக் குழுவின் கண்டறிதல்களை பொதுமக்களுக்கு அறிவிக்கும் வரையில் அவர் பதவியில் நீடிக்க முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ரஷ்யாவின் தலையீடு குறித்து ஆராய்வதற்கான விசேட ஆணைக்குழுவின் தலைவராக ரொபர்ட் முல்லரை 2017 ஆம் ஆண்டில் ரொட் ரொசென்ஸ்டெய்ன் நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## குண்டுவெடிப்பில் உயி

## பிரான்சில் இரங்



(பாரிஸ்)

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு பிரான்சில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் ஒன்றுகூடி வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது தற்கொலை குண்டுதாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர்.

இந்த தாக்குதல்கள் கிறிஸ்தவ தேவாலயங்களில் மட்டுமல்லாது நட்சத்திர விடுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இலங்கை மக்கள் மட்டுமல்லாது வெளிநாட்டவர்களும் உயிரிழந்திருந்தனர்.

இதனையடுத்து தொடர்ந்தும் இலங்கை மீது தாக்குதல்கள் நடத்தப்பட

லாமெ
அவ்வா
அரங்கே
இந்
யப்பட்ட
சில் அ
பிரா


## செவ்வாய்க்கு விண்கலம்

(பீஜிங்)

நிலவில் ஆய்வு நிலையம் ஒன்றினை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்ப சீனா திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் சீனா Chang'e-4 விண்கலத்தை நில



## தேவாலயம் அருகே ஒருவர் சம்பவ இடத்

### 7 பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தேவாலயம் அருகே மர்ம நபர் நிகழ்த்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

அமெரிக்காவின் மேரிலாந்து மாகாணம் பால்டிமோர் நகரில் தேவாலயம் ஒன்று உள்ளது. நேற்று முன்தினம் மாலை இந்த தேவாலயத்துக்கு அருகே திறந்த வெளி விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், கலந்துகொண்ட மக்கள் பலர் உணவை பெறுவதற்காக வரிசையில் காத்திருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர் ஒருவர் திடீரென அங்கிருந்த அனைவரையும் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டார்.

இதனால் பீதியடைந்த மக்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாலாபுறமும் சிதறி ஓடினர். எனினும் இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் 7 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

துப்பாக்கிச்சூடு குறித்த தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். ஆனால் அதற்குள் தாக்குதல் நடத்திய அந்த நபர் அங்கிருந்து



தப்பி ஓ
இல
அடைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...யிரிழந்தவர்களுக்கு ...ங்கல் திருப்பலி



லாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், அவ்வாறான சம்பவங்களே தினமும் அரங்கேறியவண்ணமுள்ளன.

இந்த நிலையிலேயே படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் நினைவாக பிரான்சில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பிரான்ஸ், வெர்சாய்லில் உள்ள தேவாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இதன்போது உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (7)

## ...லம் அனுப்ப சீனா திட்டம்



வின் விளிம்பில் வெற்றிகரமாகத் தரையிறக்கியது.

விண்வெளி வல்லரசு என்ற நிலையை எட்ட முயலும் சீனாவின் இலக்கில், இது முதல் படியாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டுக்குள் செவ்வாய்க்கும் விண்கலம் ஒன்றினை அனுப்புவதற்கு சீனா திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(7)

## ...கே துப்பாக்கிச்சூடு; ...டத்திலேயே மரணம்




தப்பி ஓடிவிட்டார்.

இதையடுத்து பொலிஸார், படுகாயம் அடைந்த நபர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (7)

## இந்தோனேசியாவின் தலைநகர் வேறு இடத்திற்கு மாற்றம்

### ஜனாதிபதி தீர்மானம்





(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் தலைநகரை ஜகார்த்தாவில் இருந்து ஜாவா தீவில் உள்ள வேறு இடத்துக்கு மாற்றம் செய்ய அந்நாட்டின் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

சுமார் 26 கோடி மக்கள் வாழும் இந்தோனேசியா நாட்டின் தலைநகரான ஜகார்த்தாவில் மட்டும் சுமார் ஒரு கோடி மக்கள் வசித்து வருகின்றனர்.

அருகாமையில் உள்ள நகர்ப்புறங்களில் சுமார் 3 கோடி மக்கள் வசிப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தற்போதுள்ள பெருநகரங்களில் மக்கள் நெருக்கடியை கட்டுப்படுத்தவும் புதிய நகரங்களை உருவாக்கி மக்களை அங்கு குடியமர்த்தவும் இந்தோனேசியா அரசு தீர்மானித்துள்ளது.

இதில் முதல்கட்டமாக இந்தோனேசியா நாட்டின் தலைநகரை ஜகார்த்தாவில் இருந்து ஜாவா தீவில் உள்ள வேறு இடத்துக்கு மாற்றம் செய்ய அந்நாட்டின் ஜனாதிபதி ஜோக்கோ விடோடோ தீர்மானித்துள்ளதாக அந்நாட்டின் ஊடகங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## 200 ஆண்டுகளில் முதன் முதலில் பதவி விலகும் பேரரசர் அகிஹிட்டோ



(டோக்கியோ)

ஜப்பான் பேரரசர் அகிஹிட்டோ பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

85 வயதான பேரரசர் தனது வயது மற்றும் உடல்நலக் குறைவு என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தனது வயது மூப்பின் காரணமாக தினசரிப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என்றும் உடல்நிலை நலிந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானில் கடந்த இருநூறு ஆண்டுகளில் பதவி விலகும் முதலாவது பேரரசர் இவர் ஆவார்.

அதற்கமைய அவரது புல்வர் முடிக்குரிய இளவரசர் நறுஹிட்டோ அரியணையைப் பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானில் அரசருக்கு எந்த அரசியல் அதிகாரமும் இல்லை என்ற போதிலும் அவர் தேசத்தின் அடையாளமாக விளங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா அதிக வரிவிதிப்பு

### ட்ரம்ப் குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா அதிக வரி விதிப்பதாக ட்ரம்ப் தொடர்ந்தும் விமர்சித்து வரும் நிலையில் மீண்டும் ஹர்லி டேவிட்சன் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா அதிக வரி விதிப்பதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம்சாட்டியுள்ளார்.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற குடியரசுக் கட்சி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளால் அமெரிக்காவுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக தெரிவித்தார்.

காகிதப் பொருட்களுக்கு அமெரிக்கா வரி ஏதும் விதிக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர், ஆனால் தங்களது பொருட்களுக்கு இந்தியா, சீனா, வியட்நாம் நாடுகள் அதிக வரி விதிப்பதாக குற்றம் சாட்டினார்.

அமெரிக்க தயாரிப்பான ஹர்லி டேவிட்சன் மோட்டார் சைக்கிளுக்கு இந்தியா 100 சதவீத இறக்குமதி வரி விதிப்பதாக சாடிய ட்ரம்ப், இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் மோட்டார் சைக்கிள்களுக்கு வரி விதிக்கவில்லை என மேலும் தெரிவித்தார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொடர் குண்டுத் தாக்குதல்

# பலியான வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 54 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 54 ஆக அதிகரித்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 42 வெளிநாட்டவர்கள் இதுவரை இனங் காணப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**



மேலும் 12 வெளிநாட்டவர்கள், குண்டுவெடிப்புகளுக்குப் பின்னர் காணாமல் போயுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு வைத்தியசாலையில் இன்னமும் அடையாளம் காணப்படாமல் உள்ள சடலங்களுக்குள் இவர்களின் சடலங்களும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் 5 வெளிநாட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பேராதனை பல்கலைக்கழகத்தில் 24 மணிநேர பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 24 மணி நேர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக கமராக்கள் பொருத்தப்பட்டு வருவதோடு பாதுகாப்பு பிரிவினர் திடீர் சோதனைகளையும் நடத்தி வருகின்றனர். இங்குள்ள பள்ளிவாசல் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

பர்தா அணிவதை தடை செய்யவுள்ளதாக பீடாதிபதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கலஹா, மாகந்தபாதை, பேராதனை, கம்பளை வீதி மற்றும் அக்பர் பாலம், விளையாட்டு உள்ளரங்கு வீதி ஆகியன திடீர் திடீரென தடை போடப்பட்டுச் சோதனையிடப்படுகிறது. பல்கலைக்கழகத்திற்குள் நுழைய சுற்றுலா பயணிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் மறு அறிவித்தல் வரை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.


விளையாட்டு மைதானத்தை வெளியாருக்கு வாடகைக்கு விடுவது நிறுத்தப்பட்டுள்ளதோடு காலை, மாலை வேளைகளில் உடற் பயிற்சிக்கு வருவோரது வாகனங்கள் மைதான தரிப்பிடத்தில் நிறுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் எதிர் வரும் 6 ஆம் திகதி கற்றல் செயற்பாடுகளுக்காக மீளத் திறக்கப்படும் என முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கத்தோலிக்க தேவாலயங்களில் மீண்டும் திருப்பலி பூஜை-கர்தினால்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களையடுத்து கத்தோலிக்க தேவாலயங்களில் நிறுத்தப்பட்டிருந்த திருப்பலி பூஜைகளை மீண்டும் எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.



பாதுகாப்புப் படையினரின் உதவிகளைப் பெற்று பூஜைகளை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நேற்று முன்தினம் கொழும்பு புஞ்சி பொறளையிலுள்ள பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சில தேவாலயங்களில் நாளொன்றிற்குப் பல திருப்பலிப் பூஜைகள் இடம்பெறுகின்றன. எனினும், இக்காலங்களில் பாதுகாப்பை கருத்திற்கொண்டு பூஜைகளை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். இதற்காக அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு கோரியுள்ளோம். பொலிஸாரின் பாதுகாப்பை பெற்றுக்கொண்டு பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதே எமது நோக்கம்.

அதேவேளை, ஆலயங்களில் சுயாதீனக் குழுக்களை நியமித்து ஆலயங்களுக்கு வரும் அனைவரையும் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஆலயங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவ்வேளைகளில் சந்தேகத்திற்கிடமான நபர்கள், பொதிகள் போன்ற பொருட்களைக் கண்டால் அது தொடர்பில் அக்குழுவினர் பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் திருப்பலிப் பூஜைகளில் கலந்துகொள்ள வரும் பக்தர்கள் எந்தவொரு பொதியையோ அல்லது பைகளையோ ஆலயத்துக்குள் கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூட நம்பிக்கைகள்

இன்றைக்கு யார் முகத்தில் விழித்தேன் என்று தெரியவில்லை. பார்க்கின்றவன் எல்லாம் என் மேல் எரிந்து விழுகின்றான் என்று சொல்லி அலுத்துக்-கொள்கிறவர்கள் பல பேர் உண்டு. பார்க்கின்றவர்கள் எல்லாம் எரிந்து விழுகின்றார்கள் என்றால் விழித்த முகத்தில் என்ன கோளாறு என்று யோசிப்பதை விட உங்கள் முகத்தில் அல்லது மனதில் என்ன கோளாறு என்று யோசிக்கின்றது தான் நல்லது.

ஒரு பையன் ஒரு பரீட்சை எழுதினான். பெயிலா போனான். என்னடா காரணம் என்று விசாரித்தார்கள். வழக்கமாக நான் எழுதுகின்ற அந்த பச்சை கலர் பேனா அன்றைக்குத் தொலைந்து போய் விட்டது சேர். வேறு ஒரு பேனாவால் எழுதுவது போல் ஆகி விட்டது. அதுதான் ரிசல்ட்டும் வேற மாதிரி ஆயிற்று என்றான்.

பேனாவின் கலரை பார்த்தா புள்ளி போடுறார்கள் என்று கேட்டால், அப்படி இல்லை சேர்...அந்த பேனா தான் ராசியான பேனா! என்கின்றான். ராசியான கலர், ராசியான சைக்கிள், ராசியான வீடு இது உண்மை என்றா நினைக்கின்றீர்கள்?

மனோதத்துவ நிபுணர்கள், இது எல்லாம் அர்த்தமில்லாத விடயம்-மூட நம்பிக்கை என்கின்றார்கள். ஒரு தடவை, இரண்டு தடவை பச்சை கலர் பேனாவால் எழுதி பாஸ் பண்ணிவிட்டான். உடனே பாஸாகியதற்கு பச்சை கலருக்கும் சம்பந்தம் இருக்கின்ற எண்ணம் அவன் மனதிற்குள்ளே கொஞ் சம் கொஞ்சமாக வேர் விட ஆரம்பிக்கின்றது. அவ்வளவுதான். மூட நம்பிக்கை அவன் மூளைக்குள்ளே போய் உட்காந்து விடு கின்றது. மனோதத்துவ நிபுணர்கள் இதையெல்லாம் கூட சோத னைகள் மூலம் நிரூபித்திருக்கின்றார்கள். BF.Skinner என்று ஒருத்தர் superstition experiment செய்த முதல் ஆள் இவரா கத்தான் இருக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அவர் என்ன செய்தார்...?

சில புறாக்களை தனித்தனியாக கூண்டிற்குள்ளே அடைத்தார். 15 நிமிடத்திற்கு ஒரு தடவை அதற்கு சில தானியங்களை ஆகாரமாகக் கொடுத்தார். அதற்கு பின் பார்த்தால் 15 நிமிடத்திற்கு ஒரு தடவை அந்தப் புறாவெல்லாம் வித்தியாசமாக நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டது. ஒரு புறா தலையை மேலேயும் கீழேயும் ஆட்டுகின்றது. ஒன்று கூட்டிற்குள்ளேயே அப்படியும் இப்படியுமாக கத்தியது... ஒன்று கழுத்தை ஒரு மூலைப்பக்கமாக நீட்டியது. நிமிடத்திற்கு ஒரு தடவை தீனி தவறாமல் போட்டுக் கொண்டு தான் இருந்தார். இருந்தாலும் அந்த புறாக்களெல்லாம் அந்தநேரம் பார்த்து ஒவ்வொரு விதமாக நடந்து கொள்ள ஆரம்பித்தது. அதெல்லாம் superstitious ஆகி விட்டது. அதாவது மூட நம்பிக்கைக்கு ஆளாகியது. இது எப்படி என்று skinner விளக்கம் கொடுக்கின்றார்.

முதல் தடவையாக தீனி போடுகின்ற போது தற்செயலாக அந்தப் புறா ஏதாவது செய்து கொண்டிருக்கின்றது... உதாரணமாக ஒரு புறா தீனி வருகின்ற நேரத்தில் தற்செயலாக தலையை மேலேயும் கீழேயும் ஆட்டிக் கொண்டிருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு மூன்று தடவை தீனி வருகின்ற சமயம் இதேமாதிரி செய்தது என்றால்... அதற்கு பின் இந்தப் பழக்கம் உறுதியாகின்றது. ஒரு கட்டத்தில் என்ன ஆகி விடுகின்றது என்றால்... தலையை ஆட்டினால் தீனி வரும் என்று அந்தப் புறா நம்ப ஆரம்பித்து விடுகின்றது.அவ்வளவு தான் விடயம்.

superstitious behaviour is the product of coincidental reward என்கின்றார் அந்த ஆராய்ச்சியாளர். இன்னொரு விடயம் என்ன என்றால்... மூட நம்பிக்கைக்கு ஆதரவான சான்றுகளை மட்டுமே மனி தன் தேட முயற்சி செய்கின்றான்.

ஒரு நாள், ஒரு ஆள் முகத்தில் விழித்து அன்றைக்கு ஏதாவது ஒரு கெடுதல் வந்து விட்டது என்றால்... அதற்கு பின் அந்த ஆளை பார்க்கின்ற போதெல்லாம்... என்ன கெடுதல் நடக்குதோ அதைத் தான் கணக்கில் எடுத்துக் கொள்கின்றான். அன்றைக்கே ஏதாவது நல்லது நடந்தால் கூட அதை நினைத்துப் பார்ப்பதில்லை.

ஒரு விமான விபத்திலே தப்பித்தவர்கள் சில பேரை பேட்டி கண்ட போது நாங்கள் செய்த பிரார்த்தனை தான் எங்களை காப்பாற்றியது என்று சொல்கின்றார்கள். அதே விபத்தில் செத்துப் போனவர்கள் கூட கடைசிக் கட்டத்தில் பிரார்த்தனை செய்திருப்பார்கள். ஆனால் அதை சொல்வதற்கு அவர்கள் உயிரோடு இல்லை. அதனால் நிரூபிக்கின்றது கஷ்டமாக போய்விடுகின்றது. இப்படியெல்லாம் சொல்வதனால் எல்லாமே மூட நம்பிக்கை என்று நான் சொல்வதாக யாரும் நினைத்திட வேண்டாம்.

பல நல்ல நம்பிக்கைகளைக்கூட சரியான நிரூபணம் இல்லாததால் மூட நம்பிக்கை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். அது வேற விடயம். இது வேற விடயம். இது இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். இந்த ராசி பார்க்கின்ற விடயத்தை சில பேர் சாமர்த்தியமாக கூடப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு கணவர் தன் மனைவியை பார்த்து,

தினமும் காலையில் உன் முகத்தில் விழித்து விட்டேன் என்றால் அன்றைக்கு முழுவதும் எனக்கு ராசியான நாள். எல்லாம் நல்ல விதமாக நடக்கின்றது. அப்படி என்று சொல்லி வைத்துவிட்டார். அந்த ஆளை தனியாக அழைத்துக் கொண்டு வந்து ஏன் சேர் நீங்கள் அப்படி சொல்கின்றது நிஜம் தானா? என்று கேட்டேன்.

அட நீங்க வேற சேர்! அப்படிச் சொன்னதனாலேதான் காலையிலேயே எழுந்து கோப்பி போட்டுக் கொண்டு என் முன்னாடி வந்து முகத்தை காட்டுகின்றா! இல்லை என்றால் அவள் எழும்புவதற்கு எட்டு மணிக்கு மேலே ஆகி விடும். நான் அவளுக்கு கோப்பி போட்டு குடுக்கின்றது போல் ஆகிவிடும் என்றார் அந்தக் கில்லாடியான ஆள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கானல் நீராகும்

# தொழிலாளர் உரிமைகள்

உலகத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காக போராடி அமெரிக்க நீதிமன்றத்தினால் தேச விரோதிகளாக முத்திரை குத்தப்பட்டு தூக்குத் தண்டனை கைதிகளாக தூக்கு மேடையில் நின்று அவர்கள் கூறிய வாசகங்கள் மிகவும் பிரசித்தமானவை. "எட்டு மணிநேர வேலைக் காகவும் ஏனைய தொழிலாளர்களின் அடிப்படை உரிமைக்காகவும் போராடினோம். எங்கள் கல்லறைகளின் மௌனம் ஆயிரம் சொற்பொழிவுகளை விட அதிகம் வல்லமை உடையதாக விளங்கட்டும்! பொதுவாக தொழிலாளர்கள் எனப்படுவோர் உற்பத்தி சாதனத்தை சொந்தமாக கொண்டிருந்த தமது ஊழியத்தை மாத்திரம் விற்பனை செய்யும் சமூக வகுப்பினர் ஆவர். ஊழியம் என்பதுகூட உடல் சார்ந்த ஊழியமாகவோ அல்லது அறிவு சார்ந்த ஊழியமாகவோ அமையப்பெறலாம்.

தொழிலாளர்கள் நாட்டை சிருஷ்டிக்கின்றார்கள். நாட்டை சுயதன்மை நிறைவு பொருளாதார முடைய அபிவிருத்தியின் பாதையில் அழைத்துச் செல்கிறார்கள். உலக நாடுகளின் வரலாற்றை உழைப்பின் மூலமாகவும் புரட்சியின் மூலமாகவும் மாற்றியமைத்த பெருமைக்குரியவர்களாக விளங்குகின் றனர் என வாய் முழக்கமிட்டாலும் உலகத் தொழிலாளர்களில் 70 விழுக்காடு பகுதியினர் வறுமையின் பிடியில் வாடுகின்றனர் என உலகத் தொழிலாளர் அமை யத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

நம் நாட்டில் அரச துறை ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், பெருந்தொட்ட தொழிலாளர்கள், சுய தொழில் செய்வோர் என தொழிலாளர்கள் வகைப்படுத்தப்பட்டாலும் திருட்டு தொழில் செய்பவர்கள், விபச்சாரம் செய்வோர்கள், போதைப் பொருள் கடத்துபவர்கள், பிச்சை எடுப்பவர்கள், கசிப்பு காய்ச்சுபவர்கள் கூட ஒரு வகையான தொழிலாளர்களாகவோ கருத முடியும்.

ஒருபுறம் முதலாளித்துவம் மற்றும் தாராளவாத சிந்தனைகள் அகோர வளர்ச்சியில் செல்வதால் தொழிலாளர்கள் ஒருபுறம் நசுக்கப்பட்ட மறுபுறத்தே உலக மயமாக்கம் உருவான காலம் தொடக்கம் உழைக்கும் வர்க்கம் பாரிய பின்னடைவுகளை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இன்றைய நவீன கணனி சார் மின்வலுத் தொழில் நுட்பம் பரவலாக அறிமுகப்படுத்தியுள்ள ரோபோக்களினுடைய பயன்பாடு வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகளில் தொழிலாளர்களின் தேவைப்பாட்டை கேள்விக்கு உட்படுத்தியுள்ள அதேசமயம் இந்நிலைமை இலங்கை போன்ற நாடுகளில் இன்னும் சில ஆண்டுகளில் ஏற்படலாம் என்பது அபத்தமே.

வரலாற்றின் படி 12 தொடக்கமே 18 மணித்தியாலம் வரை காணப்பட்ட தொழிலாளர் வேலை நேரத்தை 8 மணித்தியாலங்களாக மட்டுப்படுத்தும் படி 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிக்கக்கோ மாநகரில் நாடு முழுவதிலுமிருந்து வந்த 3 இலட்சத்து 50 ஆயிரத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் மேற்கொண்ட கனதியான போராட் டமே சர்வதேச தொழிலாளர் தினமாக பரிணாமம் கண்டது.

இப் போராட்டத்தின் விளைவாக பலர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், காயப்படுத்தப்பட்டார்கள், தூக்கிலிடப்பட்டார்கள் என்பது மேலதிக வரலாற்று செய்தியாகும். இலங்கையை பொறுத்தளவில் 1896 ஆண்டு இலங்கையில் முதலாவது வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது. சுதந்திர இலங்கையில் முதலாளித்துவ சிந்தனையுடன் முகிழ்ந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்ப காலங்களில் சர்வதேச தொழிலாளர் தினத்தை பொது விடுமுறையாக வழங்காது இழுத்தடித்து வந்த சூழ்நிலையில் 1955 ஆம் ஆண்டு தான் மேதினம் இலங்கையில் முதலாவது சர்வதேச தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டது. அதிலும் குறிப்பாக இலங்கை பொருளாதாரத்தின் மூலவேராக விளங்கும் மலையக தோட்டப்புற தொழிலாளர்களுக்கு 1965 ஆம் ஆண்டு நாள் மே 1 விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது என்பதும் கசப்பான வரலாற்று உண்மையாகும். இவ்வாறு பல்வேறு உயிர்த்தியாகங்கள், வேதனைகள், இழப்புக்களோடு வென்றெடுக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தினமும் தொழிலாளர் உரிமைகளும் இன்றைய சம்காலத்தில் அடக்கப்பட்டு சுரண்டப்படுவது வேதனையிலும் கொடுமையானது.

எமக்கு தெரிந்த மே தினம் என்பது வெறுமனே அறிக்கைகள், கூச்சல், கூப்பாடுகள், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், அறிக்கைகள், மேடை முழங்கள் என்பனவற்றோடு நிறைவடைந்து செல்வது மே தினத்தின் மகிமையை கொச்சைப்படுத்தும் செயலாக அமைகிறது. உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்; நீங்கள் பெறுவதற்கு பொன்னான தொழிலாளர் உலகம் காத்திரு க்கிறது என மார்க்சிசத்தின் தந்தை கார்ள்மார்க்ஸ் அறைகூவல் விடுத்த காலம் போய் இன்று எனது கட்சியின் உடைய ஆதரவாளர்களே பஸ்ஸில் ஏறுங்கள் நீங்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஆயிரம் ரூபா காசும் அரைப்போத்தல் சாராயமும் காத்துக் கிடக்கிறது எனக்கூறும் காலம் கனிந்துள்ளது.

இந்த ஆண்டு ஈஸ்டர் தின குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் தொழிலாளர் தினப் பேரணிகள் சோபை இழந்து போனாலும் வழக்கமாக மக்கள் ஆதரவு தம்பக்கமே எனும் விம்பத்தை ஏற்படுத்துவதன் ஊடாக தேர்தலில் வாக்களர்களை தமது கட்சிக்கு வாக்களிக்க தூண்டும் விளம்பர தினமாகவே தொழிலாளர் தினங்கள் மாறி வருகின்றன.

அரசியல் கட்சிகளின் தலையாட்டி பொம்மைகளாக விளங்கி வரும் தொழிற்சங்கங்கள் கூட தொழிலாளர்களின் நலன்களிலும் சவால்களிலும் உடன் நிற்க தவறி விடுகின்றன. தொழிற்சங்கங்களின் பதவியிலிருக்கும் தொழிலாளர்களுக்கு கூட தொழிற்சங்கமொன்றின் அதிகாரம் என்ன? உரிமை என்ன? கடமையென்ன? என்பது கூட தெரியாத அர்த்தமற்ற அங்கத்தவர்களாக விளங்கி வருகின்றனர். இன்று வெறு மனே தொழிலாளர்களின் மாதாந்த சந்தாப் பணத்தை ஏப்பமிடும் அமைப்புக்களாகவே தொழிற்சங்கங்கள் விளங்கி வருகின்றன.

நடேசு ஐயர் போன்ற பல போராட்டகுணம் கொண்ட தொழிற்சங்கலாதிகளால் உருவாகிய நமது நாட்டின் தொழிற்சங்க கலாசாரமானது 1960, 1970 களில் மிக ஆழமாக வேரூன்றி இருந்தன. வரலாறு ஆயினும் இன்று தொழிற்சங்கள் இன்று அரசியல்வாதிகளின் கிள்ளுக்கீரையாக விளங்குவது ஜனநாயகத்தின் மிகப்பெரும் அபத்தமாகும். முன்பெல்லாம் கார்ள்மார்க்ஸ், லெனின், சேகுவேரா, பிடல் காஸ்ரோ, மாவோ சேதுங் போன்றவர்களின் படங்களை தாங்கிய மே தினப் பேரணிகள் இன்று நாட்டையே கொள்ளையடித்த இனவாதிகளின் படங்களை தாங்கியதாக வலம் வருவது மேதினம் என்பது முதலாளித்துவ சமூகத்தின் கேளிக்கை கொண்டாட்ட தினமாக மாறியுள்ளது என்பதை உணர்த்தி நிற்கிறது.

எமது நாட்டில் தொழிலாளர் சமூகங்கள் பல துருவங்களாக செயற்படுவதும் உழைப்பாளர் சமூகம் இன்னமும் இன, மத பேதங்களை கடந்து ஒன்றுபடாமையும் சுயநல அரசியல்வாதிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இலங்கையில் தொழிலாளர் தினங்கள் ஆண்டு தோறும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டாலும் தொழிலாளர்களின் உரிமைகளை பேணும் தொழிலாளர் சட்டங்கள் தொடர்பில் நமது நாடு இன்னமும் சரியாக விழிப்புணர்வடையவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அடிப்படை தொழிலாளர் சட்டங்கள், கைத்தொழில் பிணக்குச் சட்டங்கள், கைத்தொழில் நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், தொழிற்சங்கங்களின் உரிமைகள், வரப்பிரசாதங்கள், கட்டுப்பாடுகள் என்பன தொடர்பில் போதிய சட்ட அறிவு அற்றவர்களாக எமது மக்கள் விளங்குகின்றனர். நல்லாட்சி அரசாங்கம் என போற்றி துதிக்கப்படும் இன்றைய அரசாங்கத்தில் கூட ஊழியர் நம்பிக்கை நிதியம் (Employees Trust Fund), ஊழியர் சேமலாப நிதியம் (Employees Provident Fund) என்பன அரசியல்வாதிகளால் ஒப்பமிடப்பட்டமை தொழிலாளர் உரிமைகள் ஒடுக்கப்படுவ தற்கு இடம், பொருள், காலம், எல்லை, ஏது இல்லை என்பதனை தெளிவாக காட்டி நிற்கின்றது.

1896 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வேலை நேரத்தை 8 மணித்தியாலமாக வரையறுக்கவே மாபெரும் போராட்டங்கள் வெடித்தன. ஆயினும் எமது நாட்டில் இன்று கூட பல நிறுவனங்களில் 8 மணிநேர வேலை எனும் சட்ட முறைமை சரியாக பின்பற்றப்படுவதில்லை. Shop and office Employees Act No 19 of 1954 சட்டத்தின் படி 18 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளாயினும் சரி அல்லது 16 வயதுக்கு உட்பட்ட ஆண் பிள்ளைகளாயினும் சரி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையே வேலைக்கமர்த்தப்படல் வேண்டும் என்ற சட்ட ஏற்பாடும் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் என்றால் கூட இரவு 8 மணி வரை மட்டுமே வேலைக்கமர்த்த முடியும்.

இருப்பினும் ஹோட்டல் மற்றும் உணவகங்களில் வேலை செய்யும் பெண்கள் இரவு 10 மணி வரை வேலை செய்ய முடியும் என்ற சட்ட ஏற்பாடு காணப்படுகிறது. இருப்பினும் தொலைபேசி நிறுவன பெண் இயக்குநர்கள், விடுதி வரவேற்பாளர்கள், விமான நிலைய பெண் ஊழியர்கள், பணிப்பெண்கள், பெண் வைத்தியசாலை தாதியர்களுக்கு இச்சட்டம் கட்டுப்படுத்தப்பட மாட்டாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஊழியர் ஒருவர் வாராந்த விடுமுறை, பொது விடுமுறை, போயா தின விடுமுறை, வருட விடுமுறை, சுகயீன விடுமுறை, கர்ப்பகால விடுமுறை (பெண்களுக்கு மட்டும்) என்பனவற்றை அனுபவிக்க பூரண உரித்துடையவர் என்ற சட்ட விழிப்புணர்வு கூட இல்லாமல் கொத்தடிமைகள் போல தினம் தினம் வேலைக்கமர்த்தப்படும் துன்பியல் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

மேலும் தொழில் ஸ்தாபனங்களில் ஆண், பெண் பால் சமத்துவம் கடைப்பிடிக்கப்படாமை, பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதும் நமது நாட்டில் தாராளமாகவே பதிவாகியுள்ளன. மேலும் குழந்தை தொழிலாளர்களின் நிலையும் மிக மோசமாக பதியப்பட்டுள்ளது. ஆயினும் இந்நிலை தெற்காசிய நாடுகளை பொறுத்த வரையில் இலங்கையில் மிகவும் குறைவாகவும் ஆசுவாசப்படக் கூடியதாகவும் உள்ளது.

எது எவ்வாறாயினும் தொழிலாளர்கள் எமது நாட்டின் அச்சாணியை போன்றவர்கள். ஆனால், நாடுயர தோள் கொடுப்பவர்கள், அபி விருத்தியின் பங்காளிகள், அவர்களின் உரிமைகள் வென்றெடுக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும். காரணம் உரிமைகள் உரியவாறு வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டதன் விளைவினை இந்த நாடு தாராளமாகவே நன்கறியும்.

ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
சட்ட மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஊடகவியலாளர்கள் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி டி. சிவராமின் 14 ஆம் ஆண்டு நினைவு நாளும் தீவிரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகிலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு தொடர்ந்து, நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் உருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடக செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ-9)

## வாள்வெட்டுக்கு இலக்காகி உயிருக்குப் போராடிய இளைஞனுக்கு உதவி செய்ய மறுத்த சாரதிகள்

### 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(திருகோணமலை)

திருகோணமலையில் காயம் ஏற்பட்டநிலையில் இருந்த இளைஞனுக்கு உதவிசெய்ய மறுத்த ஆட்டோ சாரதி இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதவான் உத்தர விட்டுள்ளார்.

திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று ஆட்டோ சாரதிகள் இருவரையும் ஆஜர்படுத்திய போதே எதிர்வரும் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி திருகோணமலை கடற்படை முகாமிற்கு அருகாமையில் இளைஞர் ஒருவர் காதல் விவகாரத்தில் வாளால் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இதன்போது குறித்த இளைஞன் ஆட்டோ சாரதிகளிடம் உதவி கோரிய போது இவ்விருவரும் உதவி செய்ய மறுத்துள்ளனர்.

முற்றிலும் மனிதாபிமானமற்ற இச்செயல்தொடர்பாக ஆட்டோ சாரதிகள் இருவரும் துறைமுக பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதோடு, நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு முஸ்லிம் சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம்

### வடக்கு ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியகடை பகுதியில் அமைந்துள்ள முஹிய்தீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முன்தினம் இரவு திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார். பள்ளிவாசலுக்கு விஜயம் செய்த ஆளுநரை பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி ஏ.எம். றலீம் வரவேற்றார். இதன்போது அங்கிருந்த முஸ்லிம் சமூகத்தினருடன் சுமுகமான கலந்துரையாடலில் ஆளுநர் ஈடுபட்டதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார். மேலும் தற்போது இடம்பெற்று வரும் பாதுகாப்புத் தரப்பினரின் சோதனை நடவடிக்கைகள் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான ஒன்றல்ல



என்று குறிப்பிட்ட ஆளுநர் பயங்கரவாதிகளுக்கு எதிரான செயற்பாடுகளே அவையென்றும் தெரிவித்தார்.

நாட்டில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு முஸ்லிம் சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பும் ஆதரவும் பாதுகாப்பு தரப்பினருக்கு இவ்வேளையில் அவசியமாகவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். யாழ் மாநகர சபையின் உறுப்பினர் என்.எம். நிபாஹீர் உள்ளிட்ட முஸ்லிம் சமூகத்தினர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (இ-7)

## தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவோம்

### மேதின செய்தியில் டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

பொருளாதார வீழ்ச்சியிலும் வறுமையிலும் இருக்கும் மக்களுக்கு சுய பொருளாதாரத் திட்டத்தை தூக்கி நிறுத்தாதவரை உழைப்பவர் உரிமைகள் குறித்து பேசி பயனேதும் கிடையாது. இந்த நிலை மாற்றப்படும் போது தான் உழைப்பாளர் தினத்தின் உண்மையான பலாபலன்களை எமது மக்கள் பகிர்ந்துகொள்ள முடியும்.

அதற்காக அனைவரும் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு உழைப்பது அவசியமாகும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது தேசத்தில் இளைஞர், யுவதிகளுடன் குடும்பங்களை தலைமைத்துவம் செய்யும் பெண்களும் விசேட தேவையுடையவர்களும் வேலைவாய்ப்புக்களுக்காக அலைந்து திரியும் அவலநிலை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

இந்த நிலை தொடர்வதனால் பல ஆயிரம் குடும்பங்கள் தமது எதிர்கால வாழ்க்கை தொடர்பில் நிச்சயமற்ற தன்மையுடனேயே காணப்படுகின்றனர்.

அதுமட்டுமல்லாது தொடரும் வறுமை நிலை காரணமாக தமது பிள்ளைகளை கல்வி நிலைமைகளில் கூட முன்னேற்றம் செய்ய முடியாதிருக்கின்றனர்.

இத்தகைய அவலங்கள் தீர்க்கப்படாதவரையில் உழைப்பாளர் தினமும் அதனுடனான தொடர்பும் இழக்கப்படும் நிலையிலேயே தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

இதிலிருந்து மக்களை மீண்டெழச் செய்வது அவசியம். எமது மக்கள் தமது பாரம்பரிய தொழில்களில் சுதந்திரமாக ஈடுபட வேண்டும். எமது இளைஞர், யுவதிகளுக்கு நவீன தொழில் துறைகளில் தொழில் வாய்ப்புகள் கிடைப்பெற வேண்டும். இவற்றினூடாகவே உழைப்பாளர் தினம் அதன் அர்த்தம் கொள்ளும்.

இதை எதிர்கால திட்டமாக கொண்டு உழைப்பதும் அதை அடைவதற்கான பாதைகளை உருவாக்குவதற்காகவுமே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம்.



அந்தவகையில் அன்றாட பிரச்சினைகளுக்கான தீர்வு, அபிவிருத்தி, அரசியலுரிமை, அரசியல் கைதிகளின் விடுதலை, எஞ்சிய நிலங்கள் மீட்பு, காணாமல் போனோரின் உறவுகளின் துயர் துடைப்பு, எமது சொந்த நிலத்தில் உழைக்கும் மக்களின் சுதந்திர உரிமை, இவைகளை வென்றெடுப்பதே எமது இன்றைய தேவையாகும் என தனது மேதின செய்தியில் தெரிவித்திருக்கும் டக்ளஸ் தேவானந்தா எமது மக்களின் சகல உரிமைகளையும் வென்றெடுக்க கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டவர்களாக நிகழ்காலம் நோக்கி நகரவேண்டும் என்பதுடன் எதிர்கால வாய்ப்புக்களை நோக்கி அணிதிரளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## உழைப்பாளிகளின் உரிமையைவிட உயிருக்கே பாதுகாப்புத் தேவை

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

30 வருடத்திற்கு மேற்பட்ட கொடிய யுத்தத்தால் எமது சமூகம் பாரிய தொடர் இன்னல்களை அனுபவித்து வந்தது. உயிரிழப்புகளும், உறவு இழப்புகளும் தொடர்கதையாக உள்ள நிலையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றமும் பயமும் இழப்புகளும் இன்னும் எமது சமூகத்தை பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலைகளால் நாம் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றோம். உழைக்கும் வர்க்கமாகிய எமக்கு விமோசனம் என்பது எட்டாக்கனியாக மாறியுள்ளது. ஏமாற்றங்களும், அடக்குமுறைகளும், அழிப்புகளும் தொடர்ந்தவண்முள்ளன.

அன்றாடக்காய்ச்சிகளாகக் கூட வாழ்வதற்கு இந்நாட்டில் எமக்கு உரிமை இல்லை என்கின்ற நிலை தோன்றியுள்ளது. கடவுளைக்கூட வழிபடுவதற்கு வாய்ப்பில்லாமல் போகின்றது.

இந்நிலையில் எமது உழைப்பில் நாம் வாழும்போது, எமது உயிருக்கு உத்தரவாதமில்லாத சூழல் தொடர்ந்தும் இருப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

உழைப்பாளர்களுக்கான உரிமை இல்லாவிட்டாலும், உயிரோடு வாழ்வதற்கான உரிமைக்காகப் போராடவேண்டியுள்ளது.

இலங்கையில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தனிநபர் உரிமைக்காகத் தொடர்ந்தும் போராடும் நிலை ஏற்பட்டுள்ளமை வேதனையான விடயம் மட்டுமன்றி உயிர் எப்போது போகும் என்ற பயத்தில் வாழவேண்டியுள்ளது.

இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உலகத்திடம் கையேந்தி உழைப்புக்கான உரிமை இல்லாவிடாலும், உயிருக்கு உத்தரவாதம் வழங்க வேண்டுமென உரத்துக் குரல் எழுப்புவோம்.

இதுவே இன்றைய உழைப்பாளர் நாளான மேதினத்தில் நாம் விடுக்கும் வேண்டுகோளாகும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

**ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)**

கலாநிதி மு.குணசிங்கம்

235





1915 முஸ்லிம்-சிங்களக் கலவரம்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

இதே பத்திரிகைச் செய்தி வருமாறு கருத்துத் தெரிவித்தது. எவருமே மேற்படி கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவரது சக்திமிக்க பேச்சுவன்மையும் ஆங்கிலப் புலமையும் அவரையிட்ட யாவரையும் பெருமையுடன் பேசுவதற்கு ஊக்குவித்தன.

அவர் தமிழ்க் கலாசாரத்தையும் பாரம்பரியங்களையும் கைக்கொள்வது தமிழினத்தைப் பெருமைகொள்ளச் செய்கின்றது.

இக்கூற்றுக்களிலிருந்து சமயம், கலாசாரம், மொழி, இனம் மீதுள்ள பகைமை, தமிழரின் மேல் அவர்களது சகாக்களான சிங்களவரினால் வெளியரங்கமாகக் காண்பிக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

இப்போது நாம் எமது கருத்தைத் தமிழரின் மீதும் யாழ்ப்பாணம் றிட்ஜ்வே மண்டபத்தில் (இந்து சாதனம் பத்திரிகையின் படி இக்கூட்டம் யாழ்ப்பாணச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது).

அவர்களின் கூட்டத்தில் அவர்கள் காண்பித்த மனப்பாங்குகள் மீதும் செலுத்துவோமானால் எமக்குத் தமிழரின் உண்மை மனச்சார்பு தெரியவரும்.

தேர்தலில் வாக்களிப்பதற்காக மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆர்வத்தையிட்டுக் கருத்துத் தெரிவித்த இந்துசாதனம், டாக்டர் மாக்கஸ் பெர்னாண்டோ ஒரு அரச மருத்துவராக மட்டுமே அறியப்பட்டிருக்கையில், இராமநாதனையிட்டு யாவரும் அறிந்துள்ளனர்.

இராமநாதன் ஒரு பிரசித்தி பெற்ற குடும்பத்தில் உதித்தது மாத்திரமன்றி சட்ட நிருபண சபையில் ஏறத்தாழ பதின்மூன்று வருடங்கள் தமிழரின் பிரதிநிதியாகச் சேவையாற்றியவர்.

சபையில் அவர் தமிழ்-சிங்கள இனங்கள் இரண்டின் நலனுக்காகவும் முழுச்சமுதாயத்தின் மேம்பாட்டிற்காகவும் தனது செல்வம், சுகம் இரண்டையுமே தியாகம் செய்து புகழ்பெற்றவர்.

சட்ட நிருபண சபையில் அவரது பதவிக்காலம் முடிவுற்றபோது அவர் இலங்கை நீதித்துறையின் பெருமை மிக்க வழக்கறிஞர், சட்டமா அதிபர் என்ற பதவிகளில் சேவை புரிந்தவர். எனவே இப்பதவிக்கு இராமநாதனே பொருத்தமான வேட்பாளர் என்பதில் எச்சந்தேகமும் இல்லை.

இதை மனதிற்கொண்டு அதிகூடிய தகைமையும் அதிகூடிய தராதரங்களையும் பெற்றிருந்த வேட்பாளருக்கே மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று இந்து சாதனம் எழுதியது. மேலும் பத்திராதிபர் தலையங்கம் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தது.

இந்த விடயத்தில் ஒருவரது சமயத்திற்கான விசுவாசமோ இனத்துக்கான விசுவாசமோ கருத்திற்கு எடுக்கப்படல் கூடாது. பொருத்தமானவர் எவரோ அவரே தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். விருப்பு, சா வற்றைக் கருத்திற்கொள்ளாது ஒவ்வொருவரும் தானே சிந்தித்து தனது சம்மதத்தைத் தெரிவிப்பார்களேயானால் இராமநாதனே தேர்ந்தெடுக்கப்படுவார் என நம்புகிறோம்.

இராமநாதனுக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததில் சமயம், கலாசாரம், மொழி அல்லது இனக் காரணிகள் பங்கு வகிக்கவில்லை என்ற முடிவை மேற்காணும் கூற்று ஆதரிப்பதாகத் தோன்றுகின்றது. இனப்பகைமை களை பற்ற வைப்பதற்கு இங்கு எந்த முயற்சியுமே மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக இவ் ஆசிரியர் தலையங்கம் கல்வி கற்ற இலங்கையர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க அடிப்படை அவரது தகைமையே என்பதனைப் பிரதானப்படுத்துகின்றது.

ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி கொழும்புக் கூட்டத்தில் சிங்களப் பிரதிநிதிக்குச் சார்பாக இனவேறுபாடு பெரிய விடயமாக எழுப்பப்பட்டிருந்தது.

எனவே இராமநாதன் சிங்கள-தமிழ் என்ற இருபகுதி வாக்காளர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டமை அவர்களிடையே இனப் பகைமை இருக்கவில்லை என்பதை அர்த்தப்படுத்துவதாகாது.

மேலும் இந்த ஊமைப்பகை 1915 முஸ்லிம்- சிங்களக் கலவரத்தின் போதும் 1920 மனிங் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் போதும் வலுவடைந்தது.

எனவே சட்ட நிருபண சபை பிரதிநிதிகளுக்கான தேர்தல் நாட்டின் அரசியலில் தமிழரை ஈடுபடத் தூண்டியதுடன் இலங்கை முழுவதிலுமான தேர்தலில் பங்குபற்றும் வாய்ப்பை அவர்களுக்கு அளித்து ஈற்றில் இத்தேர்தல்கள் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் இனக்குழப்பத்திற்கான சூழ்நிலையை உருவாக்கியதுடன் ஓரளவுக்கு பொதுவாக இலங்கையின் பல்லினங்கள் மத்தியிலும் அச்சூழ்நிலையை உருவாக் கின.

இந்தக் கருத்துக்கான ஆதாரத்தை நாம் வேறெங்கும் தேட வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கு 1915 இல் இலங்கையில் சிங்கள வெகுசனங்கள் தமிழ் பேசும் முஸ்லிம் இனத்தவரை எவ்வளவு முரட்டுத்தனமாகத் தாக்கினர் என்பதே போதுமானதாகும்.

இக்கலவரங்கள் கண்டியில் ஆரம்பித்து வடமத்திய, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களுக்குப் பரவின.

முஸ்லிம் வீடுகள், சொத்துக்கள், கடைகள், மசூதிகள் அழிக்கப்பட்டு பல முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர், கொலை செய்யப்பட்டனர். முஸ்லிம் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களால். இழைக்கப்பட்ட அழிவுகள் சம்பந்தமாக ஏ.மஜீத் என்ற முஸ்லிம் இனத்தவர் 8 டிசெம்பரில் குடியேற்ற அலுவலகத்திற்கு (Colonial Office) எழுதிய முறையீட்டில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பொதியுடன் இனந்தெரியாத நபர்கள்!

## பயணியின் தகவலால் நேற்றுப் பெரும் பரபரப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை மதியம் இனந்தெரியாத நபர்கள் சந்தேகத்திற்கு இடமான பொதியுடன் வருவதாக வெளிவந்த தகவலையடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குச் சென்ற பெண் ஒருவரின் பையினுள் வீதியால் சென்ற நபர் ஒருவர் குறித்த பெண்ணுக்குத் தெரியாமல் பொதி ஒன்றினைப் போட்டுள்ளார்.

இதனைப் பேருந்தில் பயணித்த ஒருவர் அவதானித்த நிலையில் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த விடயம் வைத்தியசாலையில் கடமையில் நின்ற இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வருபவர்களின் பொதிகள் மற்றும் வாகனங்கள் கடுமையான சோதனைகளுக்குப் பின்னரே உள்ளே விடுவிக்கப்படுகின்றன. இது தொடர்பாக வைத்தியசாலை அத்தியட்சகரை வினவிய போது,

நாம் பாதுகாப்புக் கடமையில் இருக்கும் இராணுவத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க வைத்தியசாலையின் இரண்டு நுழைவாயில்களை ஒன்றாகக் குறைத்துள்ளோம். எமது பாதுகாப்பு கருதியே இவ்வாறான தகவல்கள் வெளி வருகின்றன. நாமும் அதற்கேற்றால்போல் முன்னெச்சரிக்கையாக உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (இ-30)

# அடைக்கலம் கோரிய 60 இலங்கையர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்பியது பிரான்ஸ்

(கொழும்பு)

பிரான்ஸுக்குச் சொந்தமான இந்தியப் பெருங்கடலிலுள்ள ரியூனியன் தீவில் அடைக்கலம் தேடிய 60 இலங்கையர்கள் நேற்று முன்தினம் சிறப்பு விமானம் மூலம் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

120 இலங்கையர்கள் மீன்பிடிப் படகு மூலம் கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி ரியூனியன் தீவைச் சென்றடைந்தனர்.

இவர்கள், 4000 கிலோமீற்றர் பயணத்துக்கு 2350 தொடக்கம், 5580 வரையான யூரோக்களை ஒவ்வொருவரும் செலுத்தியிருந்தனர்.

மீன்பிடிப் படகின் மாலுமிகளான, இந்தோனேசியர்கள் மூவரும் சட்டவிரோத குடியேற்றத்துக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, 60 இலங்கையர்கள் நேற்று முன்தினம் விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டனர்.

2018 மார்ச் மாதம் தொடக்கம், 273 இலங்கையர்கள் ரியூனியன் தீவில் அடைக்கலம் கோரியிருந்தனர். அவர்களில் 130 பேர் இன்னமும் அங்கு தங்கியுள்ளனர்.

அவர்களின் புகலிடக் கோரிக்கை தொடர்பாக, பிரான்ஸின் அகதிகள் மற்றும் நாடற்றவர்களின் பாதுகாப்புக்கான பணியகத்தின் பதிலுக்காக காத்திருக்கின்றனர்.

ஏனையவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ-7)

# "அடிப்படைவாத கொள்கையுடையவர்களுடன் கூட்டணியமைத்து ஆட்சியமைக்க மாட்டோம்"

## மகிந்த அணி கூறுகிறது

இஸ்லாம் அடிப்படைவாத கொள்கையுடைய அரசியல்வாதிகளுடன் கூட்டணியமைத்து ஒருபோதும் ஆட்சியை அமைக்க மாட்டோம் எனத் தெரிவித்த மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுண வர்த்தன, அடிப்படைவாத கொள்கையுடையவர்கள் சட்டத்தின் ஊடாக தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாத அமைப்புக்களுடனும் அடிப்படைவாதச் செயற்பாடுகளுடனும் தொடர்புடையதாக பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன், முஜிபுர் ரஹ்மான் மற்றும் மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் கடந்த காலங்களில் தொடர்ந்தும் குற்றம்சாட்டப்பட்டார்கள். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டால் அரசாங்கம் பலவீனமடையும் என்று எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு இன்று பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. தற்போது குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டவர்கள் இவர்களுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றச்சாட்டப்படுகின்ற நிலையிலும் அரசாங்கம் எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை எனவும் அவர் குற்றம்சாட்டினார். (இ-7)

# சஹ்ரானின் மனைவி, மகளின் உயிருக்கு ஆபத்து இல்லை

## ரொய்ட்டர் தகவல்

(கொழும்பு)


தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரான் ஹாசிமின் மனைவி, மகளின் உயிருக்கு ஆபத்தில்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்மாந்துறையில் மோதல்கள் இடம்பெற்ற வீட்டிலிருந்து சஹ்ரானின் மனைவி பாத்திமா சயீதாவும் நான்கு வயது மகள் ருசானியாவும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சஹ்ரானின் மனைவிக்கு உயிர்த்தஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்பிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவரும் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அம்பாறை தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தாயும் மகளும் பத்துமுதல் 15 வீத எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்துள்ள வைத்தியசாலையின் பணிப்பாளர் உபுல்விஜயநாயக்க, சிதறல்கள் காரணமாக சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளன என



வும் தெரிவித்தார்.

இருவருக்கும் எரிகாயங்கள் ... பிருந்த ... அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்களுக்கான மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பிலான கலந்துரையாடல் நாளை 2 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

இதில் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையின் மாணவர் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் நாளை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அதிபர் சி.ரவீந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-10-136)

# மட்டக்களப்பில் மினி சூறாவளி

## பல வீடுகள் சேதம்



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினி சூறாவளியால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு - ஓட்டமாவடி, மஜ்மாநகர் கிராமம் மற்றும் ஆலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ததோடு மினி சூறாவளி வீசியது.

இதில் மஜ்மாநகர் கிராமத்திலுள்ள ஸகாத் வீட்டுத் திட்டம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டம் என்பவற்றிலுள்ள 16 வீடுகள் சேதமடைந்துள்ளன.

மஜ்மா நகர் கிராமத்திலுள்ள சீமெந்து கல் அறுக்கும் நிலையத்தின் கூரைத் தகடுகள் வீதியோரங்களில் காணப்படுவதோடு மரங்களும் நிலத்தில் வீழ்ந்துள்ளன. (இ-7)

# தொலைக்காட்சிக்கு நாடகம் திரைக்குப்பின்னால் முரண்பாடு

## மைத்திரி, ரணில், மகிந்த மீது ரில்வின் சாடல்

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தொலைக்காட்சிகளுக்கு முன்னால் ஒற்றுமையாக இருப்பதுபோன்று நாடகமாடினாலும் திரைக்குப்பின்னால் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டுக் கொள்வதாக ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம்சாட்டினார்.

குண்டுத் தாக்குதல்களின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றுபட்டு செயற்படுவதுபோலக் காண்பித்துக் கொள்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறும் என முன்கூட்டியே தகவல்கள் கிடைத்திருந்தும் அதனை உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தவில்லையென பொலிஸ்மா அதிபரின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த விவகாரத்தில் தனது கைகளைக் கழுவ முயற்சிக்கக் கூடாது. தாம் செய்த பிழைகளைச் சரிசெய்வதற்கே முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனைவிடுத்து தொலைக்காட்சிகளுக்கு முன்னால் தாம் ஒன்றிணைந்து செயற்படுவதுபோன்று ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நாடகத்தை அரங்கேற்றுகின்றனர். உண்மையில் அவர்களுக்கிடையில் முரண்பட்டுக் கொண்டுள்ளனர். தமது அரசியல் தேவைகளுக்காக இவ்வாறான நாடகம் நடத்தப்படுகிறது என்றார்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபரை நீக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே அதற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது பற்றி தீர்மானிக்கப்படும் என ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை நிற ஆடைகள் கொள்வனவு செய்த பர்தா பெண்கள் குறித்து தீவிர விசாரணை

## பொது மக்களிடம் பொலிஸார் கோரிக்கை

(கொழும்பு)

**வெள்ளை நிற ஆடைகளைக் கொள்வனவு செய்த முஸ்லிம் பெண்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பையும் பொலிஸார் கோரியுள்ளனர்.**



கடந்த 19 ஆம் திகதி மீரிகம பகுதியில் அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையத்தில் சிங்கள பௌத்த பெண்கள் விகாரைகளுக்குச் செல்லும் போது அணியும் வெள்ளை நிற ஆடைகளைக் கொள்வனவு செய்த பர்தா அணிந்த மூன்று பெண்களையும் சாரதியையும் அடையாளம் காண பொலிஸ் தலைமையகம் பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளது.

இந்த மாதம் இடம்பெறவுள்ள வெசாக் பௌர்ணமி தினத்தில் தாக்குதல் நடத்துவதற்காகவே வெள்ளை நிற ஆடைகளை கொள்வனவு செய்திருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுவதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் கடந்த 19 ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மீரிகம பகுதியில் அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையத்தில் 29 ஆயிரத்து 20 ரூபாவிற்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆடைகளைக் கொள்வனவு செய்துள்ளனர். இவ்வாறு கொள்வனவுசெய்யப்பட்ட வெள்ளை நிற ஆடைகள் சில சாய்ந்தமருது சுனாமி வீட்டுத்திட்ட பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டு வெடிப்புக்களின் பின்னர் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தலாகியுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாதிகளால் மற்றுமொரு தாக்குதல் முன்னெடுக்கப்படக் கூடும் என்ற எச்சரிக்கையைப் புலனாய்வுப் பிரிவு விடுத்துள்ளது.

இதற்கமைய நாட்டில் அனைத்து பிரதான நகரங்களிலும் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் சோதனைச்சாவடிகள் என அனைத்து வகையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் கிடைத்தால் உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-7)

# தாக்குதலுடன் தொடர்புடையோருக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சுரேஷ் வலியுறுத்து

(உனுகல்ல)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.



அத்துடன், மலையக மக்களும் பாதுகாப்பு விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.


உனுகல்ல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இத்தாக்குதலின் எதிரொலியாக மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களும் பாதிப்படைந்துள்ளனர். இவை அனைத்திற்கும் முடிவு காண்பதற்கு தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைக்குத் தீர்வு காண்பதாகும்.

இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளின் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்று செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து நாடு காப்பாற்றப்படுமானால் தொழிலாளர்களும் காப்பாற்றப்படுவார்கள்" எனத் தெரிவித்தார். (இ-7)

# வவுணதீவு கொலை விவகாரத்தில் நிரபராதி விடுவிக்கப்பட வேண்டும்

## விடுதலைப் புலிகளின் கட்சி வலியுறுத்து



(ஏறாவூர்)

இலங்கையில் குண்டுத் தாக்குதல் நடத்தியவர்கள்தான் வவுணதீவு பொலிஸாரின் கொலைக்கும் காரணமென்பது உண்மையென்றால், ஏற்கனவே இக்கொலைச் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து பிள்ளைகளின் தந்தையை விடுதலை செய்ய வேண்டுமென தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேங்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

"யுத்தத்தை நேரடியாக அனுபவித்த சமூகம் என்ற வகையில் ஆயுதம் ஏந்துவதன் ஊடாக தீர்வைப் பெற முடியாது என்பதை உணர்ந்தமையால்தான் ஜனநாயகத்தின் ஊடாகவே தீர்வைப் பெற எமது கட்சி முனைந்துள்ளது.

இதேவேளை கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்கள் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இந்த வன்முறைச் சம்பவமானது இலங்கையிலுள்ள அனைத்து இன மக்கள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர், வவுணதீவு பொலிஸாரின் கொலையுடன் இந்தக் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட சந்தேக நபருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறியதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஆகையால் வவுணதீவு கொலைச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து பிள்ளைகளின் தந்தையை நிரபராதி என காணுமிடத்து அரசாங்கம் அவரை விடுதலை செய்ய வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பொலிஸார் இருவர் கொலைசெய்யப்பட்ட விவகாரத்தில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான ராஜகுமாரன் என்பவரை பொலிஸார் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 30 | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 | 70 | 80 |
| தக்காளி | 80 | 60 | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 140 | 90 | 100 |
| கோவா | 60 | 60 | 60 | 50 | 80 |
| கரட் | 80 | 80 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 50 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 | 50 | 80 |
| வாழைக்காய் | 30 | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 120 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 50 | 120 |
| கறிமிளகாய் | 60 | 60 | 90 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 120 | 110 | 200 |
| போஞ்சி | 150 | 450 | 240 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | — | 30 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 350 | 200 | 320 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 30 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 250 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 220 | 250 | — | — | 160 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 60 | 100 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## கொக்குக்கு எத்தனை கால்



பண்ணையார் பரந்தாமன் அன்று வேட்டைக்குச் சென்று திரும்பினார். அவர் கையில் கொக்கு ஒன்று இருந்தது. தன் கையிலிருந்த கொக்கைச் சமையல்காரனிடம் தந்தார்.

"இன்று இரவு உணவிற்கு இதை அருமையாகச் சமைத்து வை. என் நண்பர்கள் சாப்பிட வருகிறார்கள்" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

சமையல்காரன் அந்தக் கொக்கை உரித்து மசாலா போட்டுக் குழம்பு வைத்தான். கறிக் குழம்பின் மணம் அவன் மூக்கைத் துளைத்தது. ஆசையை அடக்க முடியாது அவன் கொக்கின் ஒரு காலை எடுத்து சாப்பிட்டு விட்டான்.

"முதலாளி கேட்கமாட்டார். கேட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம்" என்று நினைத்தான் அவன்.

சாப்பாட்டு நேரம் முதலாளியும் அவர் நண்பர்கள் சிலரும் சாப்பிட அமர்ந்தனர். கறிக் குழம்பு பரிமாறப்பட்டது. கொக்கின் ஒரு காலைச் சுவைத்து உண்ட அவர், "மிக நன்றாக உள்ளது. இன்னொரு காலை கொண்டு வா" என்று கேட்டார்.

திகைத்த சமையல்காரனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. "கொக்கிற்கு ஒரு கால் தான் முதலாளி. எப்படி இன்னொரு காலைக் கொண்டு வர முடியும்?" என்று கேட்டான்.

நண்பர்கள் எதிரில் சமையல்காரனோடு வாதிட விரும்பாத முதலாளி, "ம்ம்ம்... நாளைக் காலையில் கொக்கிற்கு ஒரு காலா இரண்டு காலா என்று தெரிந்து கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு அந்தப் பிரச்சினையை அதோடு விட்டு விட்டார்.

மறுநாள் பொழுது விடிந்தது. சமையல்காரனை அழைத்துக் கொண்டு முதலாளி வேட்டைக்குப் புறப்பட்டார். போகும் வழியில் வயல் வெளியில் ஏராளமான கொக்குகள் நின்றிருந்தன. "கொக்கிற்கு ஒரு காலா? இரண்டு காலா? இப்பொழுது சொல்" என்று கேட்டார் முதலாளி.

"ஐயா! அதோ பாருங்கள். எல்லாக் கொக்குகளும் ஒரே காலில்தான் நின்று கொண்டுள்ளன. ஆகவே, கொக்கிற்கு ஒரு கால் தான் முதலாளி" என்றான் சமையல்காரன்.

முதலாளி, கொக்குக் கூட்டத்தைப் பார்த்து "சூ" என்று கூச்சல் போட்டு விரட்டினார்.

ஒரு காலில் நின்று கொண்டிருந்த கொக்குகள் அனைத்தும் இரண்டு கால்களையும் தரையில் ஊன்றி எழுந்தபடி சிறிது தூரம் தாவிப் பின் பறந்து சென்றன.

"இப்பொழுது என்ன சொல்கிறாய்? கொக்கிற்கு ஒரு காலா? இரண்டு காலா?" என்று மறுபடியும் கேட்டார் பண்ணையார்.

"ஐயா! நீங்கள் சாப்பிடும் போது இப்படிச் "சூ" என்று சத்தம் போட்டிருந்தால் அந்தக் கொக்கிற்கும் இன்னொரு கால் வந்திருக்குமே!" என்று சாமர்த்தியமாகச் சொன்னான் சமையல்காரன்.

அவனுடைய கெட்டிக்காரத்தனமான பேச்சைக் கேட்டு மகிழ்ந்த அவர், "இனி இப்படி நடந்து கொள்ளாதே... பொய் சொல்வது, ஏமாற்றுவது எனக்குப் பிடிக்காத குணம். உனக்குள்ளவேணுமோ அதை கேட்டு வாங்கிச் சாப்பிடு" என்றார் முதலாளி.

"என்னை மன்னிச்சிடுங்க முதலாளி... இனி மேல் இப்படிச் செய்யமாட்டேன்!" என்றான் சமையல்காரன்.

## கப்பல் பார்த்தேன்





பார்த்தேன் பார்த்தேன் பார்த்தேனே
கடலில் கப்பலைப் பார்த்தேனே...
மிதக்கும் அடுக்குமாடி மாளிகையாய்
கடலில் கப்பலைப் பார்த்தேனே...
ஒவ்வொரு கப்பலும் ஒருவிதமாய்

கடலில் மிதந்தது ஆங்காங்கே
பயணிகள் கப்பல் சரக்கு கப்பல்
மீன்பிடிக் கப்பல் போர்க் கப்பல்
இதையும் தவிர்த்து இன்னொரு கப்பல்
இருக்குதென்று அப்பா சொன்னார்

என்ன கப்பல் அதுவென்றேன்
மூழ்கித் தாக்கும் நீர்மூழ்கிக் கப்பலென்றார்
பயணிகள் கப்பல் கடல் பயணத்துக்கு உதவும்
சரக்குக் கப்பல் வணிகம் செழிக்கச் செய்யும்
மீன்பிடிக் கப்பல் கடலுணவு கொண்டு வரும்

போர்க் கப்பல் நாட்டைப் பாதுகாக்கும்
இன்று நான் பார்வையாளனாய்
நாளை நானும் மாலுமியாய்
நிச்சயம் உலகைச் சுற்றி வருவேன்...
இலங்கையன் என்ற பெருமையோடு...

## கடி ஜோக்ஸ்...



• ஒரு பையன் தெருவில போகும்போது தும்மிக்கிட்டே போனான். ஏன்னு கேட்டா
அவன் "பொடிப்பையனாம்

• ஒரு ஆளு ஒரு காக்கா வளர்த்தானாம்
அந்த காக்காவை தொட்டா ரொம்ப ஸாப்ட்டா இருக்குமாம்
அவன் அதுக்கு என்ன பேர் வைப்பான்???
MICROW SOFT

## விடுகதைகளும் விடைகளும்

• பூ பூக்கும் காய் காய்க்கும் ஆனால் பழம் பழுக்காது அது என்ன?

தேங்காய்

• மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் அவன் யார்?

சிலந்தி

• உணவை எடுப்பான் ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?

அகப்பை

• காலில் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் அவன் யார்?

தென்னை

• நடந்தவன் நின்றான் கத்தியை எடுத்து தலையைச்சீவினேன் மறுபடி நடந்தான் அவன் யார்?

பென்சில்

• அம்மா போடும் வட்டம், பளபளக்கும் வட்டம், சுவையைக் கூட்டும் வட்டம், சுட்டுத் தின்ன இஷ்டம் அது என்ன?

அப்பளம்

• ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர் அது என்ன?

கண்ணீர்

• வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன?

செருப்பு

• அண்ணனின் தயவால் ஆட்சி செய்து கொண்டிருக்கும் அழகான தம்பி அவன் யார்?

சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவே ஒருவனின் உண்மையான பலம்.
~ பிரான்சிஸ் பேகன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குற்றம் இழைக்காதவர்களை இம்மியும் தண்டித்துவிடாதீர்கள்

*அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ*
*செல்வத்தை தேய்க்கும் படை*
என்றார் வள்ளுவர்.

திருவள்ளுவர் தந்தருளிய குறட்பாக்களை எவரும் சாதாரணமான விடயமாகக் கருதி விடாதீர்கள்.

இந்த உலகம் உய்யும் பொருட்டே தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஆயிரத்து 330 குறட்பாக்களைத் தந்தருளினார்.

இந்த உலகில் மனிதன் வாழ வேண்டிய அத்தனை அறங்களையும் நீதி நெறிமுறைகளையும் தந்த திருவள்ளுவனின் திருக்குறளினூடு வாழ்வதுதான் மனிதப்பிறவியின் பேறாகும்.

இருந்தும் இன்றைய சமகால வாழ்வியலானது சிக்கல்களும் பிரச்சினைகளும் நிறைந்தவையாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதற்கான மூலகாரணம் அறத்தைப் பின்பற்றாமையாகும். எவரொருவர் அறத்தைப் பின்பற்றத் தவறுகிறாரோ அதுவே அவருக்கு இடுக்கண்ணைத் தரவல்லது.

ஆம், தமிழ் மக்களின் உரிமையை வழங்க மறுத்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களைப் படுத்தாத பாடுபடுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதென்றால் கூட, பயண அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டியிருந்தது.

அதுவும் படைமுகாம்களோடு இயங்கிய சிவில் அலுவலகங்களிலேயே பயண அனுமதிக்கான விண்ணப்பத்தை ஒப்படைக்கின்ற நடைமுறைகள் தமிழ் மக்களை கடுமையாகப் பாதித்தன.

இதுதவிர, தமிழ் இளைஞர்களை வேண்டுமென்றே கைது செய்வதும் பின்னர் அவர்களை விடுவிப்பதற்காக இலட்சக்கணக்கில் லஞ்சம் பெறுவதுமான மோசடிகளும் கண்டபாட்டில் நடந்தாயின.

ஏதுமறியாத தமிழ் இளைஞர்களைக் கைது செய்து; சித்திரவதைக்குட்படுத்தல், மன உளைச்சலை உண்டுபண்ணுதல் என்ற நாசகாரம் சர்வசாதாரணமாக நடந்தேறின.

தங்கள் பிள்ளைகளுக்கு ஏது நடக்குமோ என்ன நடக்குமோ என்ற ஏக்கத்திலேயே தங்களை இழந்துபோன தமிழ்ப் பெற்றோர்கள் கொஞ்சமல்ல. அவர்கள் விட்ட கண்ணீர் இன்னமும் நீதி கேட்டு நிற்கிறது.

அப்பாவிகள் வதைபடும்போது, அவர்கள் துன்பத்துக்கு ஆளாகும்போது நீதி கேட்க வேண்டும்.

கோவலன் குற்றவாளியா? என்பதை விசாரிக்காமல், அவனுக்கு மரண தண்டனை வழங்கியதால்தான் பாண்டிய நாடு பற்றி எரிந்தது.

கௌரவர் சபையில் திரௌபதியை மானபங்கப்படுத்தியபோது அறமுணர்ந்தவர்களின் அமைதிதான் கௌரவர் சேனையை அழித்தொழித்தது.

இதுபோலத்தான், எந்தக் குற்றமும் இழைக்காதவர்களை தண்டித்தால் அது இறைவனைக் கோபப்படுத்தும். மணிவாசகரை சிறையில் அடைத்ததால்தான் வைகைநதி பொங்கி எழுந்தது.

மேற்போந்த கதைகள் வெறும் கற்பனையன்று. அவை நிஜத்தை உணர்த்துகின்ற நிதர்சனங்கள்.

ஆம், தமிழ் மக்களுக்கு நடந்த அநீதியும் கொடுமையும் இந்த உலகில் யாருக்கும் ஏற்படக்கூடாது.

அப்பாவி தமிழ் இளைஞர்கள் தண்டிக்கப்பட்டதுபோல அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைத் தண்டித்துவிடாதீர்கள். எந்தப் பாவமும் அறியாத முஸ்லிம் பெண்களை அழவைத்துவிடாதீர்கள்.

உண்மையான குற்றவாளிகளை, குற்றவாளிகளுக்கு உதவியவர்களை, அவர்களுக்குத் துணைபோனவர்களை தண்டியுங்கள். அதுவே அறம்.

இந்த அறத்தை எங்கள் விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் சகோதரர்களும் கூறாவிட்டாலும் நாம் கூறுகிறோம் அறத்தின் வழியில் நடவுங்கள்.

# குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தை இன்ரர்போலுடன் இணைக்க நடவடிக்கை

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தை சர்வதேச குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவான இன்ரர்போல் அமைப்புடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் துறைசார்ந்த வர்த்தகர்களுடனான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், "குடிவரவு - குடியகல்வு விடயம் தொடர்பாக கருத்து வெளியிட வேண்டும் என்று நினைக்கிறேன். அதாவது, குடிவரவு திணைக்களமானது குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவுடன் இணைக்கப்பட்டதாக இல்லை. சர்வதேச பொலிஸாருடனும் இது இணைக்கப்படவில்லை.

எனவே, அடுத்துவரும் இரண்டு மூன்று நாட்களுக்குள் குடிவரவுத் திணைக்களத்தை இன்ரர்போல் எனும் சர்வதேச பொலிஸ் அமைப்புடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். எல்லைப் பாதுகாப்பும் இதனுடன் இணைக்கப்படாமல் தான் காணப்படுகிறது.

அமைச்சரவையில் இது விடயத்தில் தீர்மானங்களை எடுத்தாலும், தம்மிடமுள்ள தகவல்களை இன்னொரு துறையினருக்கு வழங்க விரும்புகிறார்கள் இல்லை.

இந்த விடயத்தில் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன. இன்னும் ஒரு வாரம் அல்லது 10 நாட்களில் இவற்றை இணைப்பது தொடர்பான சில பிரச்சினைகளும் ஏற்படலாம்" எனத் தெரிவித்தார். (ம-3)

# மைத்திரியின் அரசியல் காய்நகர்த்தல்கள் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்ததே

## பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் காய்நகர்த்தல்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்ததாகவே காணப்படுகின்றன என பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அதன் ஒரு கட்டமாகவே கடந்த வருடம் அரசியல் நெருக்கடி நிலை உருவாக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே பிரதியமைச்சர் நளின் பண்டார மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி தனது பொறுப்பை முறையாக நிறைவேற்றாவிட்டால் எதிர்காலத்தில் தேசிய பாதுகாப்பு பாரிய நெருக்கடிக்குள்ளாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்ட ஒழுங்கு அமைச்சு உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சை தனது அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொண்டமையின் காரணமாகவே தற்போது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (ம-3)

# சாய்ந்தமருது பகுதிக்கு வெடிகுண்டை ஏற்றி சென்ற வான் மீட்பு

(கொழும்பு)

சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்திற்கு வெடிபொருட்களை எடுத்துச் செல்ல உதவியதாக சந்தேகிக்கும் வான் ஒன்றினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மரதங்கடவொல, இகலபுளியம்குளம் பகுதியில் வைத்து குறித்த வான் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

250-5680 என்ற இலக்கத்தை உடைய வான் ஒன்றே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட வான்கெகிராவபொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# வீதியில் கண்டெடுத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸார்

(கரணவாய்)

வீதியில் கண்டெடுத்த பணப்பை ஒன்றை உரியவருக்குத் தெரியப்படுத்தி அதனை உடனடியாக ஒப்படைத்தனர் நெல்லியடி பொலிஸார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இருந்து நெல்லியடி நகர் நோக்கி இரண்டு போக்குவரத்து பொலிஸார் சென்று கொண்டிருந்தபோது பை ஒன்று காணப்பட்டது.

அதனையடுத்து திறந்து பார்த்தபோது அதற்குள் 7500 ரூபாய் பணம், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிளின் காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன காணப்பட்டன.

இதனையடுத்து பையில் இருந்த தொலைபேசி இலக்கம் மூலம் உரியவர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு பணம் உள்ளிட்ட ஆவணங்கள் வழங்கப்பட்டன. (இ-60)

# இரண்டாம் தவணை பாடசாலை ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முத்துத்தம்பி பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கற்றல் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் நாளை 02.05.2019 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கலந்துரையாடலில் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பாடசாலையின் சகல ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும் உரிய நேரத்திற்கு வருகை தந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ ஞான சக்தி வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் இரவு 7 மணியளவில் கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது.

இதில் நாளை சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் பொன் சந்திரவேல் விடயம் "வாக்கு வாழ்வும்" நாளை மறுதினம் ஈழவூர் சைவப்புலவர் சிவஸ்ரீ.குமாரசாமி சுமுகலிங்கம் விடயம் "சிவசின்னங்கள்" 4ஆம் திகதி சைவசின்மயர் சிவநெறிச் செம்மல் நித்தியபாபுதரன் விடயம் "திருவாசகம் என்னும் தேன்" 5ஆம் திகதி இளம்சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் ச.நவநீதன் விடயம் "பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்" எனும் தலைப்புகளில் சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

# இலாபம் நமக்கு மட்டுமே

✦ பால் கறக்கும் மாடு நம்முடையதாக இருந்தாலும், கன்றுக்குட்டியை அருகில் கொண்டுபோனால் தான் பசு பால் கொடுக்கும். அதுபோல, அடியார்களின் துணையோடு போனால் ஆண்டவனின் அருளை எளிதாகப் பெற முடியும்.

✦ "அரசு ஒழிக" என்று கோஷம் போடும் கைதிகளை சிறையில் அடைத்தாலும் அவர்களுக்கு உணவு போட வேண்டியது அரசனின் கடமையே. அதுபோல கடவுள் இல்லவே இல்லை என்று நாத்திகம் பேசுபவரையும் கடவுள் காப்பாற்றவே செய்கிறார்.

✦ சத்தியத்தைப் பேசுதல், தர்மத்தை அனுசரித்தல், தாய்தந்தையரைப் போற்றுதல், தெய்வ வழிபாடு செய்தல் இவை எல்லாம் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய அடிப்படை செயல்களாகும்.

✦ சோதனைகள் நம்மை வருத்தும்போது, அறியாமையினால் "ஆண்டவனே! உனக்கு கண்ணில்லையா" என்று கதறுகின்றோம். ஆனால், கடவுள் நமக்குப் புரிவது எப்போதும் அருள் மட்டும் தான்.

✦ கடவுளை வணங்காவிட்டால் நம்மை தண்டிப்பதில்லை. வணங்கினால் நமக்குத் தான் நன்மையே தவிர, அவருக்கு எந்த நன்மையுமில்லை. ஆற்றில் குளித்தால் நம் உடல் தான் தூய்மை பெறும். இதில் ஆற்றுக்கு எந்த இலாபமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விராட்டிற்குப் பிறகு ராகுல்தான் அதிரடி வீரர் கெயில் தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணியில் விராட் ஹோலிக்கு பிறகு கே.எல்.ராகுல் தான் நீண்ட காலம் சேவை செய்பவராக இருப்பார் என பஞ்சாப் அணியில் விளையாடும் மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

கே.எல்.ராகுல் தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்காக விளையாடி வருகிறார். தொடக்க வீரராக களமிறங்கும் அவர், நேற்று முன்தினம் நடந்த ஐதராபாத் அணிக்கு எதிராக 56 பந்தில் 79 ஓட்டங்கள் விளாசினார்.

இந்நிலையில் ராகுல் குறித்து சக அணி வீரரான கிறிஸ் கெய்ல் கூறுகையில், 'கே.எல்.ராகுல் நிச்சயமாக என் மனதில் எழும் ஒரு வீரராக திகழ்கிறார். அதாவது விராட் ஹோலி போன்று நிறைய ஆடக்கூடியவர். விராட் ஹோலிக்கு பிறகு ராகுல் தான் என்பது என் கருத்து.

நான் இப்படிக் கூறுகிறேன் என்பதாலும் ஹோலிக்கு அடுத்தது என்பதாலும் அவர் அழுத்தத்தை ஏற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர் தானாக இருக்க வேண்டும், தனக்கு எது சாத்தியமோ அந்தப் பிரதேசத்தில் இருக்க வேண்டும், யாருடனும் போட்டி போடக் கூடாது.

இந்தியாவில் நிறையத் திறமைகள் உள்ளன. நிறையப் பேருக்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. கிங்ஸ் லெவனுடன் 2 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். இது உண்மையில் அபாரமானது. எனக்கு பஞ்சாப் ஸ்டைல் பிடிக்கும். நிறையப் பெரிய வீரர்கள், மனிதர்களுடன் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (க)

# வேடிக்கை பார்க்கச் செல்லவில்லை வெல்லவே செல்கின்றோம்

## ரஹீம்





இங்கிலாந்தில் 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்குகிறது. இதில் 10 அணிகள் பலப்பரீட்சை நடத்த இருக்கின்றன. இதில் பங்களாதேஷ் அணியும் ஒன்றும். கடந்த 2015 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்ற உலகக்கோப்பை தொடரில் காலிறுதி வரை முன்னேறியது.

அந்த அணியின் முன்னணி வீரர் முஷ்பிகுர் ரஹிம் கூறுகையில்,

"நாங்கள் இங்கிலாந்து செல்வது, சும்மா உலகக்கோப்பை போட்டியில் பங்கேற்பதற்கு மட்டுமல்ல. கோப்பையை வெல்வதற்காகவும்தான். இதை நாங்கள் முழுமையாக நம்புகிறோம். நொக்அவுட் சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. எது வேண்டுமென்றாலும் கிரிக்கெட்டில் நடக்கலாம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# இந்த அதிரடி என் மனைவிக்காக மட்டுமே

## அதிரடியில் கலக்கும் ரசல் உருக்கம்




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் 47-லீக் ஆட்டத்தில் கொல்கத்தா அணியும் மும்பை அணியும் விளையாடியதில் ஆந்த்ரே ரஸ்செல்லின் அதிரடி ஆட்டத்தால் கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 232 ஓட்டங்கள் குவித்தது.

இந்தத்தொடரில் தனது 4 ஆவது அரைச்சதத்தை கடந்த ஆந்த்ரே ரஸ்செல் 80 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ச்சியாக 6 ஆட்டங்களில் தோற்று இருந்த கொல்கத்தா அணி மும்பையை வீழ்த்தி வெற்றி பெற்றதால் அடுத்த சுற்றிலும் வாய்ப்பு நீடித்துள்ளது.

ஆட்டநாயகன் விருது பெற்ற ரஸ்செல் போட்டி முடிந்தவுடன் தனது 31 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

மேலும், மைதானத்தில் வைத்து ரஸ்செல்லின் மனைவி ஜாசிம் லோரா தனது கண வரிடம் ஜாலியாகப் பேட்டி எடுத்தார்.

ஆட்டநாயகன் விருது பெற் றுள்ளேன், இந்த வெற்றி எனக்கு பிறந்தநாள் பரிசு. ரசிகர்களை குஷிப்படுத்தவும் மனைவியை கவர்ந்திழுக்கவும் என்று அதிர டியாக விளையாடுவதால் எனக்கு எப்போதும் ஒரு நெருக்கடி இருந்து கொண்டே இருக்கிறது எனக் கூறியுள்ளார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



உலக டென்னிஸ் வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டது. இதன்படி பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா முதலிடத்தில் தொடருகிறார். செக் குடியரசின் கிவிடோவா ஒரு இடம் முன்னேறி 2 ஆவது இடத்தைப்பிடித்துள்ளார். (க)

# மனைவி, பிள்ளைகளே என்னை மீட்டெடுத்தார்கள் ஐ.பி.எல். போட்டியில் அதிரடி காட்டிய வோர்னர்




மனதளவில் உடைந்து போனேன் என சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி வீரர் டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரின் 48 ஆவது லீக் போட்டி ஐதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்தது. அஸ்வின் தலைமையிலான பஞ்சாப் அணியும் வில்லியம்சன் தலைமையிலான ஐதராபாத் அணியும் மோதின.

முதலில் ஆடிய ஐதராபாத் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்கள் குவித்தது. டேவிட் வோர்னர் 56 பந்தில் 2 சிக்சர், 7 பவுண்டரிகளுடன் 81 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் ஆடிய பஞ்சாப் அணி 8 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. டேவிட் வோர்னருக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. இந்தப் போட்டியுடன் டேவிட் வோர்னர் ஐ.பி.எல். தொடரில் இருந்து வெளியேறுகிறார்.

போட்டி முடிந்த பின்னர் டேவிட் வோர்னர் கூறுகையில், 'தடை செய்யப்பட்டபோது மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தேன். எனது குடும்பத்தினர், குறிப்பாக மனைவி மற்றும் மகள்கள் என்னை மீட்டெடுத்தார்கள். அதன்பிறகு அவர்களுடன் அதிக நேரம் செலவழித்து என்னை தைரியப்படுத்திக் கொண்டேன்.

இந்த ஆண்டு சீசனின் துவக்கத்தில் நான் இப்படி ஆடுவேன் என நினைத்துப் பார்க்கவில்லை. எனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று முயன்றேன். அதன் பலனாகவே இவ்வளவு ஓட்டங்களை குவிக்க முடிந்தது. எனக்கு பக்கபலமாக ஜானி பேர்ஸ்டோவ் இருந்தார்.

சில நேரங்களில் என் தவறுக [illegible] உலகக்கோப்பை அணியில் இடம்பெற்றது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

அவுஸ்திரேலிய அணிக்கு எனது பங்களிப்பை நிச்சயம் தர முயற்சிப்பேன். வரும் போட்டிகளில் ஐதராபாத் அணிக்கு எனது வாழ்த்துக்கள்' எனத் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்தின...

கட்டளைத் தளபதிக்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பொன்று 512ஆவது படைத்தளத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் 512ஆவது பிரிகேட் தலைமையகத்தின் உயர் இராணுவ அதிகாரிகள், மற்றும் யாழ்ப்பாண பிரதேசத்தில் வாழும் 50 இற்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது உரையாற்றிய 512 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி நிலந்த.

அதாவது நீங்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட சமூகமயமாக்கப்பட்ட பின்னர் நான் உங்களை அழைத்து சந்திக்க வேண்டிய தேவை இல்லை. எனினும் நாட்டின் இன்றைய சூழ்நிலை காரணமாக நான் உங்களை சந்திப்பதற்காக அழைத்துள்ளேன்.

குறிப்பாக நான் யாழ்ப்பாணத்திலுள்ள மும்மத பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினரை சந்தித்துள்ளேன். அதன் பின்னர் உங்களை அழைத்துள்ளேன். தற்போது நாட்டில் உள்ள நிலைமை யாழ். குடாநாட்டிலும் இடம்பெறா வண்ணம் இருக்க வேண்டுமென்பதே எனது நோக்கம்.

எனவே யாழ்ப்பாணத்தின் அழகையும், யாழ்ப்பாண மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. எனவே நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு, வெளி மாவட்டத்திலிருந்து வருவோர் தொடர்பில் அவதானமாக இருப்போமாக இருந்தால், கொழும்பில் நடந்த தாக்குதல் போல் யாழ்ப்பாணத்தில் இடம்பெறாமல் தடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

பொதுமக்கள் வெளி மாவட்டத்திலிருந்து வருவோர் தொடர்பில் எமக்கு தகவல் தருவதன் மூலம் அனைத்து குற்றச்செயல்களையும் இல்லாதொழிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி, நாங்களும் மக்களைக் காப்பாற்றத்தான் போராடினோம். எச் சந்தர்ப்பத்திலும் மக்களைக் கொலை செய்ய நாம் முயற்சித்திருக்கவில்லை எனவும் தெரிவித்திருந்தார்கள். (ம-9)

## அபின் போதைப்...

அதன் போது, பொலிஸார் வருவதைக் கண்டதும் பொதி ஒன்றை போட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

அந்தப் பொதியைச் சோதனையிட்ட போது சுமார் ஒன்றரைக் கிலோ அபின் போதைப்பொருள் காணப்பட்டுள்ளது. அந்த போதைப்பொருள் பொதி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட அபின் போதைப்பொருளின் பெறுமதி இரண்டு கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரே இந்த போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வளவு பெறுமதியான அபின் போதைப்பொருள் கைப்பற்றப்படுவது இதுவே முதன்முறை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-60-101)

## வீடு புகுந்து வாள்...

மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த தம்பிராசா பொன்னுத்துரை (வயது60) என்பவரே மரணமடைந்தவராவார்.

அத்துடன் பாலாவி தெற்கைச் சேர்ந்தவர்களான த.கவிதரன் (வயது35), ந.வளர்மதி (வயது52), பாலாவி வடக்கைச் சேர்ந்த செ.குமார் (வயது35), பாலாவி வடக்கைச் சேர்ந்த சோ.கணேஸ்குமார் (வயது39), யோ.திலிசாந் (வயது25) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையிலும் பாலாவி வடக்கைச் சேர்ந்த த.யோகராசா (வயது46), வை.தவசிங்கம் (வயது39) ஆகியோர் சாவகச்சேரி வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் கச்சாய் வீதியில் வைத்து கெற்பேலியைச் சேர்ந்த ஒருவரை வெட்டி காயப்படுத்திய சம்பவத்தையடுத்து நேற்று முன்தினம் கெற்பேலி மேற்கில் தொடர் சம்பவமாக இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். அதன் எதிரொலியாக நேற்று 20 பேர் கொண்ட குழுவினர் பாலாவி தெற்கு பகுதியில் உள்ள வீட்டிற்குச் சென்று அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டியுள்ளனர்

பாலாவி கெற்பேலி கச்சாய் ஆகிய பகுதிகளில் தொடர்ந்து மண் அகழ்வு இடம் பெறுவதாகவும் இதனால் தொடர்ந்து வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று இறப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3-10-30-114)

## கிளிநொச்சியில்...

தெரியவருவதாவது,

வீதியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த முதியவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் துவிச்சக்கரவண்டியில் சென்றவருடன் மோதுண்டு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சதாசிவம் சங்கநிதி (வயது 83) என்ற முதியவரே இவ்விபத்தில் பலத்த காயங்களுடன் 1990 நோயாளர் காவு வண்டியில் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்த போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் பலத்த காயங்களுடன் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுவருகிறார்கள். (ம-3)

## பாரியளவிலான...

கடந்த 21ம் திகதி இலங்கையில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய தேசிய தௌஹீத் ஜமாத்தின் உறுப்பினர்கள் நாட்டில் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் அலெய்னா டப்லிஸ் தெரிவித்துள்ளார். ரொயிட்டர்ஸ் ஊடகத்துக்கு அவர் இதனைக் கூறியுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் மீண்டும் தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் முப்படையினரும் பொலிஸாரும் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும் ரம்ழான் பண்டிகைக்கு முன்னதாக மீண்டும் இலங்கையில் தாக்குதல் நடத்தும் அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவ்வாறான தாக்குதல்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் எச்சரித்துள்ளார். (ம-3)

## குளவி கொட்டிய...

அப்பாப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 68) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்றுக் காலை அவரது வீட்டில் இருந்துள்ளார். அப்போது காற்று வேகமாக வீசியுள்ளது. வீட்டின் வேலியில் இருந்த தேன் குளவிகள் வீட்டுக்குள் படை எடுத்துள்ளன.

வீட்டில் இருந்த மூவர் மீது சரமாரியாக குளவிகள் கொட்டியுள்ளன. கணவன் மனைவி இருவரும் குளவிக் கொட்டில் இருந்து தப்பிப்பதற்கு அருகில் உள்ள குளத்தில் குதித்துள்ளனர்.

மைத்துனி நடக்க முடியாத காரணத்தினால் அவரை குளவிகள் சுற்றியுள்ளது. அயலவர்கள் நெருப்பை கொண்டுகுளவியை நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் விரட்டியுள்ளனர்.

பின்னர் மூவரையும் வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். அதில் கணவர் சிகிச்சை பலனின்றி சில மணிநேரத்தில் உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் மரண விசாரணையை யாழ் போதனா வைத்திய சாலை திடீர் மரண விசாரணைஅதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## விசாரணை அறி...

திபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புதிய பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் சாந்த கோட்டேகொட நேற்று முற்பகல் பாதுகாப்பு அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர், பாதுகாப்புத் துறையின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அதிகாரத்தைக் கொண்டதாக நியமிக்கப்பட்டுள்ள குறித்த விசாரணைக் குழுவின் அறிக்கை இரண்டு வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கமைய எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து, நாட்டின் தேசிய பாதுகாப்பு விரைவில் உறுதி செய்யப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது, பாடசாலைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ள பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் அரச அலுவலகங்களின் செயற்பாடுகளை வழமைபோல் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-3)

## பயங்கரவாத எதி...

தாரணமாக செயற்படுகின்றார் என ஐ.நா சபையின் பிரதி பொதுச் செயலாளர் மிங்குல் ஏஞ்ஜில் மொரிசன் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா சபையின் பிரதிப் பொதுச்செயலாளர் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதியை சந்தித்தபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்துவரும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ ஹுட்டேரஸ் சார்பிலும் பாராட்டு தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஐ.நா பிரதிப் பொதுச்செயலாளர், இலங்கை ஜனாதிபதியினால் தற்போது முன்னெடுக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இன்று முழு உலகத்தினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். அத்தோடு இந்நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதற்காக ஐ.நா பயங்கரவாத ஒழிப்புக்கான விசேட பிரதிநிதிகள் குழுவொன்றினை வெகுவிரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்க ஐ.நா பொதுச் செயலாளர் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது நாடான ஸ்பெயின் நாட்டில் 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அல்கைதா தாக்குதலை இதன்போது நினைவுகூர்ந்த பிரதிப் பொதுச் செயலாளர், ஸ்பெயின் நாட்டைப் போன்றே இலங்கையும் நட்புறவான பல சமூகங்களைக் கொண்ட சிறந்த விருந்தோம்பல் நாடாகும் எனவும் அவ்வாறான நாடுகள் தீவிரவாத தாக்குதல்களுக்கு உள்ளாகுதல் துரதிஷ்டவசமானவை எனவும் தெரிவித்தார்.

ஐ.நா நாகரிகங்களுக்கான கூட்டமைப்பினால் தற்போது மத வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பு பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த பிரதிப் பொதுச்செயலாளர், அதற்கான ஆலோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ ஹுட்டேரஸ் மற்றும் பிரதிப் பொதுச்செயலாளர் ஆகியோருக்கு தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த துயரமான சந்தர்ப்பத்தில் ஐ.நா சபையின் ஒத்துழைப்பு இலங்கைக்கு கிடைத்திருப்பது பெரும் பலமாகும் எனத் தெரிவித்தார்.

தற்போது எதிர்கொள்ள நேர்ந்துள்ள பயங்கரவாத சவால்களை வெற்றிகொள்வதற்கான ஆற்றல் இலங்கை பாதுகாப்பு துறையினரிடம் காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவி மிக முக்கியமானவை என தெரிவித்தார். மேலும் இந்த பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு இராணுவத்தினரை நாட்டிற்குள் கொண்டுவர தாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.

ஐ.நா சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி ஹெனா சிங்கர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனெவிரத்ன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியதுங்க உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-3)

## அசாதாரண சூழ்...

ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர். ஒவ்வொரு நிரந்தர குடியிருப்பாளர்களின் விவரம் அடங்கிய பட்டியல் (குடும்ப விவரங்களின் பட்டியல்) வழங்கப்படும். அதன்மூலம் சந்தேகத்துக்கு இடமானவர்கள் வீடுகளில் தங்குவதற்கு இடமளிக்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-3)

## தௌஹீத் ஜமாத்...

என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துசார இந்துநில் தெரிவித்துள்ளார். இவ்வாறே நாட்டில் அடிப்படைவாதத்தினை தேற்றுவிக்க கோத்தபாய ராஜபக்ஷ பல முயற்சிகளை மேற்கொண்டார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

241 ஏ, ஸ்ரீசத்தர்வ மாவத்தை, கொழும்பு என்ற முகவரியில் உள்ள காணியை தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு கோத்தபாய ராஜபக்ஷ பெற்றுக்கொடுத்துள்ளார்.

குறித்த அமைப்பின் அலுவலகத்தை அமைப்பதற்கே அவர் இந்த காணியை வழங்கினார். இவ்வாறே அடிப்படைவாத அமைப்புக்களுக்கு அவர் உதவிகளை வழங்கியுள்ளார்.

மேலும் இவ்வாறான செயற்பாட்டின் மூலம் அவர் அமைதியாக இருக்கும் முஸ்லீம் இனத்தை இரண்டாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாறு அனைத்து செயற்பாடுகளையும் கீழ்த்தரமான அரசியல் யுத்தியை கொண்டு அவர் மேற்கொண்டார்.

இதேவேளை அடிப்படைவாதத்தை போதிக்கும் பள்ளிகள் 200ஐ கட்டியதாக பசில் ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானது. இந்த சம்பவத்திற்கும் கோத்தபாய உறுதுணையாக இருந்தார் என அவர் மேலும் கூறினார். (ம-3)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கல்வியங்காட்டுக்கு அண்மையில் அமைதியான சூழலில் 4 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**071 568 3311**

(8636)

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

0768226240

V2 TRAVELS

●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை


## காத்தான்குடியில்...

போது 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து காத்தான்குடியில் 600 பேர் கொண்ட இராணுவத்தினர், நேற்றைய தினம் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது விசா இன்றி தங்கியிருந்த 5 இந்தியர்கள், பெண் ஒருவர் உள்ளிட்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணினிகள் மற்றும் மதப்பிரசார இறுவெட்டுக்கள் ஒரு தொகையினை இராணுவத்தினர் மீட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-3)


## காணி விற்பனைக்கு

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை, குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(8615) **077 803 7876**


## பகுதி பகுதியாக...

வுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இந்த மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் இவ்வாறு மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது. (ம-3)


## புதிய கிளை திறப்பு

நீண்ட காலமாக திருநெல்வேலியில் இயங்கி வரும் எமது நிறுவனம் எமது சேவையை விஸ்தரிக்கும் வகையில்

**129/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**(சீமாட்டி புடவையகத்தின் மேல்மாடியில்)**

என்ற விலாசத்தில் புதிய கிளையினை இன்று 2019 மே முதலாம் திகதி திறக்கிறது. இதுவரை காலமும் நாம் எமது சேவையை வழங்குவதில் எமக்கு ஆதரவு தந்த எமது வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், முன்னைநாள் பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எம்.இராஜநாயகம் அன் கோ
பட்டயக் கணக்காளர்கள்

(8637)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

(C-6239)

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல 401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-6233)

## British College of Higher Studies

BCHS

**Diploma in English (Phase 1 & Phase 2)**
அனைத்து வயதினருக்குமானது.
**Spoken English**

வெளிநாடு செல்பவர்களுக்கான கற்கைநெறி
**IELTS (Academic / General)**
**IELTS - Life skills**

**Spoken Sinhala with Grammar**

வார, வார இறுதி நாட்களிலும்...
மாணவர்களுக்கு வசதியான நேரங்களில்

தொடர்புகளுக்கு:

**Sirambiyady Lane, Jaffna.**

**021 222 4550 / 076 138 0212**

(C-6246)

## வாகன கண்காணிப்பு கருவி

உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை தொலைபேசி மூலம் அவதானிக்கலாம்.
Milage, Over Speed, Parking Report என பல வசதிகள் உண்டு.



தொடர்புகளுக்கு:

**077 444 5909**

(8633)

## Vacancy for English teacher

IELTS, IELTS Life skills & English Courses Full time teachers.

Call:
**077 703 3039**

(C-6245)


# மரண அறிவித்தல்



பிறப்பு: 1935.02.21 - இறப்பு: 2019.04.30

## மார்க்கண்டு பாலசுப்பிரமணியம்

**(பிரபல தொழில் அதிபர், MMB மில் - கலேவல, கிளிநொச்சி, வவுனியா)**

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 58, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் (M.M.B- மில்) நேற்று (30.04.2019) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணி அவர்களின் அன்புக் கணவரும், நந்தினிதேவி (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், தேவராசா (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், அருண், ஹரிசன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பாக்கியம், மயில்வாகனம் மற்றும் இராமநாதி, செல்லம்மா, தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, சுப்பிரமணியம், செல்லத்துரை, தெய்வானை, மற்றும் உருக்குமணி, சிவசம்பு, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், சிவபாலன், சிவஞானம், சிவபாக்கியம் மற்றும் சிவராசா, சிவலட்சுமி, சிவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்தானலட்சுமி - மனோகரன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2019) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.58, கலட்டி
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
021 222 1971

(8634)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... வீதி, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org